
# புதிய ஜனநாயகம்

மார்ச் 2015
ரூ.10.00



# தேசத்துரோகி!

# செய்யாறு டாஸ்மாக் கடை உடைப்பு: மக்களின் போர்க்கோலம்!

முன்பெல்லாம், திருட்டுத்தனமாக, ஊருக்கு ஒதுக்குப் புறமாக சாராயம் காய்ச்சி விற்பவனை சமூக விரோதியென, குடிகெடுப்பவன் என ஊரே காறித்துப்பும். இப்போது மதுவிலக்குப் பிரிவுப் போலீசை வைத்துக்கொண்டிருக்கும் அரசே குடிகெடுக்கும் சாராய விற்பனைத் தொழிலை நடத்துகிறது.

முள்ளுத்தோப்பில் சாராயம் விற்கப்பட்டபோதுகூட, ஊருக்கு நாலுபேர் தான் குடித்தார்கள். இப்போதோ, பள்ளிக்கூட மாணவன் முதல், பல்லு போன கிழவன் வரை வயது, சாதி வித்தியாசம் இல்லாமல் குடித்துச் சீரழிகிறார்கள். குடியால் மனம் பிறழ்ந்தவர்கள், குடல் வெந்து உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரித்திருக்கிறது. குடிபோதைக்குக் கணவனை பறிகொடுத்து, பிள்ளைகளுடன் நடுத்தெருவில் நிறுத்தப்படும் இளம் விதவைகளின் அவலம் வார்த்தைகளுக்குள் அடங்காதவை!

''டாஸ்மாக் கடையை இழுத்து மூடு!'' என்று பெண்கள் வயிறெரிந்து கதறினாலும் அரசு செவிமடுப்பதில்லை. ஊர்த் தாலியறுத்து சேர்த்த பணமானாலும், ஆண்டுக்கு 23,000 கோடி ரூபாய் அளவுக்கு இந்த சாராய விற்பனைதான் அரசு வருமானத்தில் பெரியதாக, முதன்மையானதாக உள்ளது. பெருங்கடனில் சிக்கிக்கொண்டுள்ள அரசே சாராய விற்பனையை நம்பித்தான் நடக்கிறது. எனவே, இனி அரசு சாராயக் கடையை எதிர்ப்பவர்களெல்லாம் ''நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள்; தேசத்துரோகிகள்!'' என்று ஆக்கிவிடுவார்கள். மக்களின் எதிர்ப்பை ஒடுக்கி இண்டு இடுக்குகளிலும் கடை விரிக்கிறது அரசு. மாவட்ட ஆட்சியாளர்களே தினசரி இவ்வளவு விற்பனை செய்து கல்லாக் கட்டியாக வேண்டும் என்று இலக்குவைத்து நெட்டித் தள்ளுகிறார்கள். வீடு வீடாக வி.ஏ.ஓ. வந்து ''சரக்கு வேண்டுமா'' எனக் கேட்காதது ஒன்றுதான் பாக்கி!

மதுவினால் ஏற்படும் தீமையை மக்களுக்கு எடுத்துக் கூறும் அளவுக்கு, மதுக்கடையை வீதிதோறும் கடை விரிக்கும் அரசின் 'கொள்கை'யைத் தாக்கி சீர்குலைக்கும் அளவுக்கு ஓட்டுக்கட்சிகள் கேள்விக்குள்ளாக்குவதில்லை. அடையாளப் போராட்டங்கள் என்ற வரம்பையும் தாண்டுவதில்லை. மாறாக, பள்ளி அருகில், கோயில் அருகில், நெடுஞ்சாலை ஓரத்தில் கடையை விரிக்காதே என்று கோரிக்கைகள் வெட்டிச் சுருக்கப்படுகிறது. சாராயம் விற்கும் அரசிடமே, ''கடையை மூடு'' என மனு கொடுத்து மன்றாடுகிறார்கள்.

பூரண மதுவிலக்கு பற்றி பேசுவதோ, இவர்களுக்கு இப்போது பேஷனான வார்த்தையாகி விட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் போட்டி போட்டுக்கொண்டு கலர் கலராக இயக்கம் எடுக்கிறார்கள். இதை எல்லாம்விட பெரிய கூத்து என்னவென்றால், சரக்கை எப்படியெல்லாம் விதம் விதமாகக் கலந்து குடிக்கலாம் என்று கூறும் வேதங்களைச் சட்டமாக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி., பார்ப்பன கும்பல் கூட பூரண மதுவிலக்கு என்ற பெயரில் உண்ணாவிரதம் இருப்பதுதான்.

இந்தப் பின்புலத்தில்தான், குடிகெடுக்கும் டாஸ்மாக் - சாராயக்கடையை எதிர்த்து இப்படித்தான் போராட வேண்டுமென்ற முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறது, அழிவிடைத்தாங்கி கிராம மக்களின் போர்க்கோலம்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமம் அழிவிடைதாங்கி. முறையான பேருந்து வசதி கிடையாது. நடந்து செல்வதற்குக் கூட இலாயக்கற்ற சாலைகள். புதர்மண்டிய சாலைகளின் நடுவே இருட்டைக் கிழித்துக்கொண்டு நடப்பதற்கு மன உறுதி நிச்சயம் வேண்டும். குடிக்க தண்ணீர் கூட இல்லாத இவ்வூரில் பள்ளிக்கு அருகிலேயே இருக்கிறது, அரசு டாஸ்மாக் கடை.



கடையைத் திறந்தது முதல், கண்மண் தெரியாமல் குடியில் மிதக்கும் கணவன்; தங்கள் வீட்டுப் பிள்ளைகளே குடிகாரர்களாகச் சீரழிவது; குடிகாரர்களின் கேலிப் பேச்சு - சீண்டல்களுக்குள்ளாகும் பள்ளிக்கூடச் சிறுமிகள்... என வெங்களத்தூர், குத்தனூர், அழிவிடைதாங்கி உள்ளிட்ட சுற்றுவட்டார ஏழு கிராமங்களைச் சேர்ந்த தாய்மார்கள் சொல்லொண்ணா துயரத்தை அனுபவித்து வந்தனர்.

டாஸ்மாக் கடையை இழுத்து மூட வேண்டும் என்று இரண்டு வருடங்களாக போராடி வருகின்றனர், இக்கிராம மக்கள். மூன்று முறை டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டும் போராடிப் பார்த்துவிட்டனர். விடிவு தான் பிறக்கவில்லை.

இந்நிலையில்தான், தமது உறுப்பினர்கள் வாயிலாக இப்பிரச்சினையை அறிந்த

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# மண்ணைப் பறித்து மக்களைக் கொல்லும்

# தேசத்துரோகி!

தேசத்துரோகி! இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களான விவசாயிகளை, அவர்களது வாழ்வாதாரமான விளைநிலத்தை, பன்னாட்டு, கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் பிடுங்கிக் கொடுக்கும் மோடியை வேறெப்படி அழைப்பது? விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதி, இந்த தேசத்துக்கு இழைக்கப்படும் துரோகமன்றி வேறென்ன?

பனியா, மார்வாரி தரகு முதலாளிகளின் எச்சில் காசில் பதவியைக் கைப்பற்றிய மோடி, மே 26-ஆம் தேதியன்று பிரதமர் நாற்காலியில் அமர்ந்தவுடன், இந்த நிலப்பறி சட்டத்தை இயற்றுவதற்கான வேலைகளைத்தான் தொடங்கியிருக்கிறார். காங்கிரசு கூட்டணி அரசால் 2013-இல் நிறைவேற்றப்பட்ட நிலம் கையகப்படுத்துதல், மறுகுடி அமர்வு, மறுவாழ்வுச் சட்டத்தை (Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 – LAAR) திருத்துவதற்காக, மாநில வருவாய்த்துறை அமைச்சர்களின் கூட்டத்தை, ஜூன் 27 அன்றே கூட்டியிருக்கிறது மோடி அரசு. பின்னர் டிசம்பர் 2014 - இல் இதற்கான அவசரச் சட்டம். தற்போது கடும் எதிர்ப்புக்கிடையிலும் அதை நாடாளுமன்றத்தில் நிரந்தர சட்டமாக நிறைவேற்ற முயற்சிக்கிறது மோடி அரசு. இந்தச் சட்டத்தின் தேவை என்ன?

கிராமப்புறத்திலோ, நகர்ப்புறத்திலோ சிறுதொழில் ஒன்றை நடத்த விரும்பும் தொழில்முனைவர் தனக்குத் தேவையான நிலத்தை தனது சொந்த முயற்சியில்தான் வாங்கிக்கொள்கிறார். விற்க விருப்பமில்லாத ஒரு விவசாயியின் நிலத்தை அவர் கட்டாயப்படுத்தி அபகரித்தால் அது குற்றம் என்பதுதான் சட்டத்தின் நிலை. சாலைகள், துறைமுகங்கள், மருத்துவமனைகள் போன்ற சமூகத்தின் பொதுத் தேவைகளுக்காக நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியிருக்கும்போது, விற்க விருப்பமில்லாதவராயினும் பொதுநன்மை கருதி விற்க வேண்டியிருக்கிறது. சாலைகள் முதல் பொதுத்துறை ஆலைகள் வரையிலானவற்றுக்கு முன்னர் இப்படித்தான் நிலம் கையகப்படுத்தப்பட்டது - அதுவும் ஒரு காலனிய காலச் சட்டத்தின் கீழ். அச்சட்டப்படி பொதுநலனுக்காக நிலம் இழந்த பலர் இன்னமும் நிவாரணம் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

ஆனால், தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் அமலாகத் தொடங்கிய கடந்த 15,20 ஆண்டுகளில், கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனையே பொது நலன் என்று சித்தரித்து, விவசாயிகள் மற்றும் பழங்குடி மக்களின் நிலங்களை காலனியச் சட்டத்தின் கீழ் பிடுங்கி அவர்களுக்கு வழங்கத்தொடங்கியது அரசு. மத்திய - மாநில அரசுகள் நடத்திய இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக, நாடெங்கும் மக்கள் போர்க்குணமிக்க போராட்டங்களை நடத்தினர். தொழில் தொடங்கி வேலைவாய்ப்பு தரப்போவதாக கூறிக்கொண்டு பல்லாயிரம் ஏக்கர் நிலத்தை வளைத்துக் கொண்ட அம்பானி, அதானி, டாடா போன்ற தரகு முதலாளிகள், அவற்றை ரியல் எஸ்டேட்டுகளாக்கி விற்றிருப்பதும் வேறு பல முறைகேடுகளும் மறுக்கவியலாதபடி அம்பலமாகின. இதன் விளைவாக வேறு வழியின்றி காங்கிரசு கூட்டணி அரசு புதியதொரு சட்டத்தை (LAAR – 2013) இயற்ற வேண்டியிருந்தது.

இச்சட்டத்தின்படி, ஒரு பகுதியில் தனியார் முதலாளிகள் நிலம் வாங்குவதாக இருந்தால் நில உடைமையாளர்களில் 80% பேர் விற்கத் தயாராக இருக்கவேண்டும். அரசுத்துறை-தனியார்துறை கூட்டுத் திட்டங்களாக இருந்தால் 70% பேரின் சம்மதம் வேண்டும். அப்பகுதி உள்ளூராட்சி மற்றும் கிராமசபையின் ஒப்புதலைப் பெறவேண்டும். கிராமப்புற நிலங்களுக்கு சந்தை விலையைப் போல 4 மடங்கும், நகர்ப்புற நிலங்களுக்குச் சந்தை


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 30 இதழ்: 5**

**மார்ச் 2015**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
**puthiyajananayagam@gmail.com**

தொலைபேசி: 94446 32561

விலையைப் போல 2 மடங்கும் ஈட்டுத்தொகை தரப்படவேண்டும்.

குறிப்பிட்ட பகுதியில் விளைநிலங்களைக் கையகப்படுத்துவதனால் அப்பகுதியில், விவசாயப் பொருளாதாரத்தைச் சார்ந்து வாழும் நிலமற்ற விவசாயிகள், கைவினைஞர்கள், உதிரி தொழிலாளர்கள், சிறு வணிகர்கள் உள்ளிட்டோருக்கு ஏற்படும் வாழ்வாதாரப் பாதிப்பு (social impact assessment) மதிப்பிடப்பட்டு அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

அப்பகுதியில் சுற்றுச்சூழல் எவ்வளவு பாதிக்கப்படும் (environmental impact assessment) என்பதும், விவசாயத்தின் மூலம் கிடைத்து வந்த வேலைவாய்ப்பு எவ்வளவு, அந்த இடத்தில் தொடங்கப்படும் தொழிலால் கிடைக்கக் கூடிய வேலைவாய்ப்பு எவ்வளவு என்பதும் மதிப்பிடப்பட வேண்டும். ஒரு போகத்துக்கு மேல் விளையும் நிலத்தை,




சென்னைக்கு அருகே கும்மிடிபூண்டி வட்டத்தில் அமைந்துள்ள கண்ணன் கோட்டை கிராமத்தில் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி பயிர்களை அழித்து, நிலங்களைக் கையகப்படுத்தியது, தமிழக அரசு.

(மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் தவிர) கையகப்படுத்தக் கூடாது. பயன்பாட்டுக்கு 5 ஆண்டுகளுக்குள் கொண்டுவரவில்லையானால், உடைமையாளர் வசமே நிலத்தைத் திருப்பித் தரவேண்டும். இந்த விதிமுறைகளைப் பின்பற்றாமல் ஏமாற்றும் அதிகாரிகளுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் வழக்கு தொடரலாம்.

நெடுஞ்சாலை, ரயில்பாதை, அணுசக்தி, இராணுவம் உள்ளிட்ட 13 வகையான அரசின் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்தினால், அவற்றுக்கு மேற்கூறிய நிபந்தனைகள் பொருந்தாது என்றும் அச்சட்டம் விதிவிலக்களிக்கிறது.

மக்கள் சொத்தை ஆக்கிரமித்துத் தின்றே ருசி கண்டுவிட்ட கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இச்சட்டப்படி நிலம் வாங்குவது கட்டுப்படியாகவில்லையாம். இச்சட்டத்தின் கீழ் நிலம் வாங்கக்கூடாது என்று கட்டுப்பாடாக இருந்த முதலாளிகள், 'செயல்படாத' மன்மோகன்சிங்கை இறக்கி விட்டு, அந்த இடத்தில் 'செயல்படும்' ரவுடியை அமர்த்தினார்கள். உடனே செயல்பட்டு விட்டது மோடி அரசு.

தற்போது மோடி கொண்டுவந்திருக்கும் சட்டம், 13 துறைகளுக்கு காங்கிரசு அரசு அளித்திருந்த விதிவிலக்குகளை ''சற்றே'' அதிகரிப்பதாக சொல்லிக் கொண்டு, ரியல் எஸ்டேட் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் விதிவிலக்கு பட்டியலில் கொண்டு வந்து, அதன் மூலம் ''விதி'' என்ற ஒன்றே இல்லாமல் செய்து விட்டது.

மோடியின் சட்டப்படி, அரசுத்துறைகளுக்கு மட்டுமின்றி, எந்தவொரு தனியார் முதலாளிக்காக நிலத்தை கையகப்படுத்துவதாக இருந்தாலும், உடைமையாளராகிய விவசாயியின் ஒப்புதலை அரசு கேட்கவே தேவையில்லை. அப்பகுதியைச் சேர்ந்த நிலமற்ற கூலி விவசாயிகள், கைவினைஞர்கள் போன்றோருக்கு நிவாரணம் தரத் தேவையில்லை. சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்தும் பரிசீலிக்கத் தேவையில்லை. 3 போகம் விளையும் நிலமானாலும் அதனைக் கையகப்படுத்துவதற்குத் தடையில்லை. கையகப்படுத்திய நிலத்தை 20 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தாவிட்டாலும் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை.

''தனியார்'' என்பதை ஒரு தொழில் நிறுவனம் என்று 2013 சட்டம் வரையறுத்திருந்தது. மோடியின் சட்டப்படி தனியார் என்பது நபராகவோ, தன்னார்வ நிறுவனமாகவோ கூட இருக்கலாம். அது மட்டுமல்ல, தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகளையும் கூட ''பொதுத் தேவை'' என்று வரையறுத்து, அவர்களுக்கு விளைநிலத்தைப் பிடுங்கிக் கொடுக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்கிறது.

நிலத்தின் சந்தை விலையைத் தீர்மானிப்பது உள்ளிட்டு, இந்த சட்டத்தை அமலாக்கும் அதிகாரம் பெற்ற மத்திய, மாநில அதிகாரிகள் முறைகேட்டில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்டோர் வழக்கு தொடுக்க முடியாது. அரசின் அனுமதி பெறாத பட்சத்தில் அதை எந்த நீதிமன்றமும் விசாரிக்க கூடாது.

- இவைதான் மோடி கொண்டு வந்திருக்கும் சட்டத்தின் சரத்துகள். இதனை ''சட்டம்'' என்ற பெயரால் அழைப்பதே அயோக்கியத்தனமானது. மன்னர்களும் இளவரசர்களும் தம் கண்ணில் படும் அழகிய பெண்களை அந்தப்புரத்துக்குத் தூக்கி வரச்சொல்லி, இதற்காகவே நியமித்து வைத்திருக்கும் தனிப்படைக்கு ஆணையிடுவார்களாம். அப்படி கார்ப்பரேட் முதலாளிகளுக்கு நிலத்தைக் கைப்பற்றித் தரும் தனிப்படைதான் மோடி அரசு.

2013 சட்டம் விதிக்கும் நிபந்தனைகள் காரணமாக, பல இலட்சம் கோடி முதலீடு தேங்கி நிற்கிறதாம். இந்த சட்டம் நிறைவேறிவிட்டால் தொழில்துறை வளர்ந்து கோடிக்கணக்கில் வேலைவாய்ப்பு கிடைக்குமாம். இதனை எதிர்ப்பவர்கள் கார்ப்பரேட்டுகள், உள் கட்டுமானம் ஆகிய சொற்களையே கெட்ட வார்த்தைகள் ஆக்குகிறார்கள் என்று சீறுகிறார், அமைச்சர் அருண் ஜெட்லி.

ஜெட்லி கூறுவது கலப்படமற்ற பொய். சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்காக நாடெங்கும் ஒதுக்கப்பட்ட பெரும்பகுதி நிலங்கள் ரியல் எஸ்டேட்டுகளாக்கப்பட்டு விட்டன. மும்பை தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் மட்டும் 2.5 இலட்சம் ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு மாநில அரசிடமும் குவிந்திருக்கும் பல இலட்சம் ஏக்கர் நிலத்தில் தொழில் தொடங்க ஆளில்லை. சி.பொ.ம. என்ற பெயரில் மகாராட்டிராவில் 2006-ஆம் ஆண்டிலேயே 1250 ஹெக்டேரை வளைத்துப் போட்டு, அதில் தொழில் தொடங்காத முகேஷ் அம்பானி, அங்கே மேலும் 35,000 ஹெக்டேர் கேட்கிறார். டில்லி, மும்பை தொழில் தாழ்வாரம் என்ற பெயரில் 10 இலட்சம் ஏக்கர் நிலத்தை வளைப்பதற்கான வேலைகளை மத்திய அரசு செய்து வருகிறது. நொய்டா பகுதியில் நிலம் கையகப்படுத்தியபோது விவசாயிகளுக்கு ஒரு சதுர மீட்டர் நிலத்துக்குத் தரப்பட்ட விலை ரூ.820. பின்னர் அது கைமாற்றி விற்கப்பட்ட விலையோ ச.மீட்டருக்கு 35,000 ரூபாய். ஆறு வழிச்சாலை, கிராமப்புற வீடுகட்டும் திட்டம், அடிக்கட்டுமானங்களை நிறுவுதல் என்ற பல பெயரில் தரகு முதலாளிகளுக்கு நிலத்தையும் கொடுத்து, தொழில் வாய்ப்பையும் அரசுதான் ஏற்படுத்திக் கொடுக்கிறதேயன்றி, முதலாளிகள் சொந்தமாக எதையும் செய்யவில்லை.



மோடி அரசு கொண்டுவந்துள்ள நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்தங்களை எதிர்த்து டில்லியில் உள்ள ஜந்தர் மந்தர் பகுதியில் நடந்த விவசாயிகளின் ஆர்ப்பாட்டம்.

ஆங்கிலத் தொலைக்காட்சியில் இச்சட்டத்தை ஆதரித்து வாதாடும் ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த சேஷாத்திரி சாரி, ''மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 15% கூட பங்களிக்க முடியாத விவசாயத்தைப் பிடித்துக் கொண்டு தொங்கினால் வளர்ச்சியை எப்படி சாதிக்க முடியும்? வறுமையை எப்படி ஒழிக்க முடியும்'' என்று பார்ப்பனக் கொழுப்பு வழியப் பேசுகிறார்.

இடுபொருள் விலையை அதிகரித்து, கொள்முதல் விலையைக் குறைத்து, பாசன வசதியை அழித்து எல்லாத் திசைகளிலிருந்தும் தாக்கி விவசாயியை வறுமையில் தள்ளிவிட்டு, பிறகு அவர்களையே குற்றம் சாட்டுகிறார்கள் இந்தக் கிரிமினல்கள். 50% க்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து சோறு போட்டு வரும் விவசாயம் அழிந்தால், இந்த நாடே உணவுப் பாதுகாப்பை இழந்து கப்பலை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கவேண்டி வரும். விவசாயிகள் நாடோடிகளாக, நகர்ப்புறங்களில் அலைந்து மடிய வேண்டிவரும்.

மோடி அரசின் நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்த நகலை எரிக்கும் நியம்கிரி பாதுகாப்பு சமிதி என்ற அமைப்பைச் சேர்ந்த கோண்டு பழங்குடியின மக்கள்.



தனியார்மய-தாராளமயக் கொள்கையின் கீழ் இவர்கள் முன்வைக்கும் வளர்ச்சியென்பது வேலைவாய்ப்பை வழங்காத வளர்ச்சி. அமெரிக்க, ஐரோப்பிய சந்தைகளின் காலை நக்கும் வளர்ச்சி. மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு என்பது வேலைவாய்ப்பை பெருக்குவதுமில்லை, வறுமையை ஒழிப்பதுமில்லை. ஆற்றுமணலையும், தாது மணலையும், கிரானைட்டையும் கொள்ளையடித்து விற்பதுகூட மொத்த உள்நாட்டு உற்பத்தியை கூட்டத்தான் செய்கிறது. நிலக்கொள்ளையும் அத்தகையதுதான். இங்கிலாந்தில் விபச்சாரம் மற்றும் போதை மருந்து வியாபாரத்தில் ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் புரள்வதால், அதையும் மொ.உ.உற்பத்தியில் (0.7 சதவீதம்) சேர்த்துக் கொண்டு விட்டது பிரிட்டிஷ் அரசு. மொ.உ.உற்பத்தியை உயர்த்த மோடி முன்வைக்கும் பாதையும் அத்தகையதுதான்.

நிலப்பறி சட்டத்தின் காரணமாக, டில்லி சட்டமன்றத் தேர்தலில் பல தொகுதிகளில் தோற்றபோதிலும், பிற மாநிலத் தேர்தல்களிலும் மக்களின் இந்தக் கோபம் பிரதிபலிக்கும் என்று தெரிந்திருந்த போதிலும், தனது கூட்டணிக் கட்சிகளே இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் சூழ்நிலையிலும், அம்பானி, அதானிகளின் ஆசையை நிறைவேற்றித் தருவது எப்படி என்ற கோணத்தில்தான் தனது வியூகங்களை வகுத்து வருகிறது மோடி அரசு.

குஜராத் இனப்படுகொலையின்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மோடி வெளிப்படுத்திய வன்மத்தைக் கண்டோம். இந்நாட்டின் விவசாயிகள் மீதும் உழைக்கும் வர்க்கத்தின் மீதும் பார்ப்பனப் பாசிசக் கும்பல் கொண்டிருக்கும் துவேசத்தையும் வெறுப்பையும் இச்சட்டத்தில் காண்கிறோம். இது விவசாயிகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் இன அழிப்புக்கு நிகரானதொரு தாக்குதல். விவசாயிகளையும் இந்த நாட்டையும் பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால், வெறி பிடித்த இந்த மிருகத்தை வீழ்த்துவதொன்றுதான் வழி. ●

## ஆம் ஆத்மி கட்சியின் வெற்றி:

# மாற்றா? ஏமாற்றா?

> தோற்றுப் போய், நிலைகுலைந்து மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கும் இந்த அரசமைப்பைச் சீராக்க முடியும் என்ற பிரமையை உருவாக்குகிறது ஆம் ஆத்மி.

குஜராத்தில் தயாரிக்கப்பட்ட மோடி ஹோலோகிராம் டில்லியில் பொசுக்கென்று மறைந்து விட்டது. தனது சொந்த முகத்தையே முகமூடியாக அணிந்து கொள்ள விரும்பும் சுய மோகியும், உடல் முழுவதும் தனது பெயரையே எழுதி மினுக்கிக் கொண்டிருந்த மனநோயாளியுமான மோடிக்கு, தனது பத்து லட்சம் ரூபாய் கோட்டையும் அதன் மீது நெளிகின்ற 'நரேந்திர தாமோதர்தாஸ் மோடி' என்ற பெயரையும் சேர்த்து ஏலம் விட்டால்தான், ''பெயரை''க் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

''எனக்குப் பயந்து ஆட்சி செய்பவர்களைத் தேர்ந்தெடுங்கள்'' என்று டில்லி தேர்தல் பிரச்சாரத்தில் திமிர்ப்பேச்சு பேசிய மோடி, 'தனக்குப் பயந்து' தானே ஒளிய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இவ்வாறு மோடியின் சட்டையைக் கழற்றிய ஒரு காரணத்துக்காகவாவது டில்லி மக்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் 46.63% ஆக இருந்த பா.ஜ.க. வின் வாக்குகள், 32.2% க்கு வீழ்ந்து விட்டன. ''அராஜகவாதி, ஆளத்தெரியாதவன், ஓடுகாலி, நகர்ப்புற நக்சல், குடியரசு தினத்தை அவமதித்தவன்'' என்று மோடியும் அமித் ஷாவும் பலவாறாக கேஜ்ரிவாலை அர்ச்சித்துப் பார்த்தனர். இவை அனைத்தையும் கேஜ்ரிவாலுக்கு சூட்டப்பட்ட புகழாரங்களாக மக்கள் எடுத்துக் கொள்வார்கள் என்று இந்த மூடர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆம் - ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் டில்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால்.




''தேசியப் பெருமிதம், வளர்ச்சி, ஒழுங்கு'' என்பன போன்ற சொற்களின் மீது தான் ஏற்றியிருந்த சாம்பிராணி நெடியை, தனது 8 மாத கால ஆட்சியே இறக்கி விட்டது என்பதையோ, தன்னுடைய பஞ்ச் டயலாக்குகள் நொந்த மாட்டைக் கொத்துவது போல, மக்களைக் கொத்தி அவர்களது ஆத்திரத்தைக் கிளறி விடுகின்றன என்பதையோ மோடி புரிந்திருக்கவில்லை.

'56 அங்குல மார்பு கொண்ட ஆம்பிளை' என்ற திமிரில், ''ஜோதேஷ் கா மூட் ஹை, வஹி தில்லி கா மூட் ஹை'' (தேசத்தின் மனநிலை எதுவோ அதுதான் தில்லியின் மனநிலை) என்று தேர்தல் பிரச்சாரத்தில் பஞ்ச் டயலாக்கை எடுத்து விட்டார் மோடி. ''தில்லியின் மனநிலை எதுவோ அதுதான் தேசத்தின் மனநிலை'' என்று அதே தோசை திருப்பிப் போடப்படுவதற்கான சாத்தியம் இருக்கிறது என்றோ, வெற்றிக்குக் காரணம் நான்தான் என்று காட்ட முயன்றால், தோல்விக்கான பொறுப்பிலிருந்தும் தப்ப முடியாது என்றோ மோடி யோசிக்கவில்லை. பஞ்ச் டயலாக்குகள் மூளைக்குள் மின்னலாக வெட்டும் தருணங்களில், மூளையின் மற்ற பகுதிகள் அனைத்தும் செயலிழந்து விடும் போலும்!

சொற்களைக் கண்டு மயங்கி ஏமாறும் மக்கள், ''சொற்களை வைத்து சோறு பொங்க முடியாது'' என்பதையும் ஒரு கட்டத்தில் புரிந்து கொள்ளத்தானே செய்கிறார்கள். 2013 தேர்தலில், டில்லி எல்லைக்குட்பட்ட 14 கிராமப்புற தொகுதிகளில் 13-ஐ பா.ஜ.க. வென்றது. இப்போது 14 -இலும் ஆம் ஆத்மி வென்று விட்டது. காரணம், விவசாயிகளின் நிலத்தைப் பிடுங்கி கார்ப்பரேட் முதலாளிகளுக்கு எழுதி வைக்கும் மோடியின் நிலப்பறி அவசரச் சட்டம்.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக மோடி பெற்ற வாக்குகளை, மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கத்துக்கு எதிரான மக்களின் தீர்ப்பு என்று வியாக்கியானம் செய்தன ஆளும் வர்க்கங்கள். ''குஜராத்தில் இலவசமே கிடையாது'' என்று பெருமை பொங்க பிரச்சாரம் செய்தார் மோடி. ஆம் ஆத்மி கட்சியின் 49 நாள் ஆட்சியில் குறைக்கப்பட்ட தண்ணீர், மின்சாரக் கட்டணங்களை பா.ஜ.க. வின் கட்டுப்பாட்டிலிருந்த டில்லியின் கவர்

னர்ஆட்சிபழையபடிஉயர்த்தியது.விளைவு, மாத வருவாய் ரூ.13,500 க்கு கீழ் உள்ள டில்லியின் 60% வாக்காளர்கள் பா.ஜ.க. வுக்கு எதிராக வாக்களித்திருக்கின்றனர்.

டில்லியின் 40 சதவீத மக்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்கிறார்கள். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் போது கணி சமான குடிசைப் பகுதிகளை நகரை விட்டு அகற்றிய பின்னரும் இதுதான் நிலைமை. இந்த குடிசை வாழ் மக்கள் மத்தியில் பிரச் சாரம் செய்த கிரண் பேடி, ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குடிசைப் பகுதிகளை ஒழிப்போம்'' ''மோடி அனைவருக்கும் வீடு தருவார்'' என்று பேசினார்.



ஆணவமும் செருக்கும் கொண்ட மோடி - அமித்ஷா கூட்டணி தில்லியில் செருப்படிபட்டு மண்ணைக் கவ்வியது.

அவர் பேசிய இரண்டு வாக்கியங்களில் முதல் வாக்கியம் மட்டும்தான் மக்களின் காதில் விழுந்திருக்கிறது. இரண்டாவது வாக்கியம் பொய் என்பது அவர்களுக்குத் தெரியும். ''பா.ஜ.க. முதலாளிகளின் கட்சி'' என்று டில்லி மக்கள் பேசுவதைப் பரவ லாகக் கேட்க முடிந்தது என்கின்றன பத்திரிகைகள். இது மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் புரிந்த கொண்ட உண்மை. நாடாளுமன்றத் தேர்தலின்போது எந்த ஆடம்பரத்துக்கு மக்கள் மயங்கினார்களோ, அது சில மாதங்களிலேயே அருவருக்கத்தக் கதாகி விட்டது. மோடிக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த மக் களின் வர்க்கக் கோபத்துக்கு ஆம் ஆத்மி கட்சி ஒரு வாகனமாகி யிருக்கிறது.

**விளக்கமாத்துக்குத்தான் நல்லகாலம் !**

தூய்மை இந்தியா விளம்பரங்களைக் காட்டி, ''மோடியின் ஆட்சியில் விளக்கமாத்துக்குத்தான் நல்லகாலம் பிறந்திருக் கிறது'' என்று கேலி செய்தார் நிதிஷ் குமார். தற்போது டில்லி சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் வேறொரு பொருளில் விளக்கமாத் துக்கு நல்லகாலம் பிறந்திருப்பதைக் காட்டுகின்றன.

தாங்கள் பா.ஜ.க.வைப் போல எதிர்மறையாகப் பிரச்சாரம் செய்யாமல், மக்கள் பிரச்சினைகளை மையப்படுத்தி நேர்மறை யாகவும் நாகரிகமாகவும் பிரச்சாரம் செய்ததாகவும், அதற்குக் கிடைத்த பலன்தான் இந்த வெற்றி என்றும் ஆம் ஆத்மி கூறிக் கொள்கிறது. உண்மை அதுவல்ல; காங்கிரசு கட்சி பத்தாண்டு காலம் உழைத்து மோடியின் வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுத்தது. மோடியோ, ஆம் ஆத்மியின் அமோக வெற்றியை எட்டே மாதங்களில் சாத்தியமாக்கிக் காட்டியிருக்கிறார்.

இந்த வெற்றியைச் சாத்தியமாக்கியிருப்பது, மோடியின் 8 மாத ஆட்சியின்மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு மட்டுமல்ல; காங்கிரசு உள்ளிட்ட எல்லா ஓட்டுக்கட்சிகள் மீதும் போலீசு-அதி கார வர்க்கம்-நீதித்துறை உள்ளிட்ட இந்த அரசமைப்பின் மீதும் மக்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கையும் வெறுப்பும் டில்லி தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றன. இது, தோற்றுப்போன இந்த அரசமைப்பு அளித்திருக்கும் வெற்றி என்றும் கூறலாம். நம்பிக்கை இழந்த மக்களின் நம்பிக்கைதான் ஆம் ஆத்மி பெற்றிருக்கும் வெற்றி. அதனால்தான் வெற்றியின் இந்தப் பரி மாணம் தன்னை அச்சுறுத்துவதாகக் கூறுகிறார் கேஜ்ரிவால்.

ஒரு தேர்தல் வெற்றி என்ற முறையில் பார்த்தால், கேரளம், மேற்கு வங்கம் போன்ற பகுதிகளில், துவக்க காலத்தில் கம்யூனிஸ்டுகள் பெற்ற வெற்றியோடு கூட ஒப்பிடும் அளவு இது 'சாதனை' அல்ல. இந்திய நாடாளுமன்ற அரசியலின் இளமைக்காலத்தில், ஜனநாயக அரசமைப்பு குறித்த பிரமைகள் தகர்ந்து விடாத காலத்தில், விடுதலைப் போராட்டத்தின் மரபுரிமையாக காங்கிரசு கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில், பெறப் பட்ட வெற்றிகள் அவை.

இருந்த போதிலும், மோடி - அமித் ஷா கும்பல் தங்களைப் பற்றி உருவாக்கியிருக்கும் 'வெல்லப்பட முடியாதவர்கள்' என்ற பிம்பத்தை இது தகர்த்திருப்பதால், இந்த வெற்றியின் பரிமாணம் பெரிதாகத் தெரிகிறது. 70 க்கு 67 என்பது எண்ணிக்கை அளவில் நிச்சய மாகப் பெரிய வெற்றிதான் என்ற போதிலும், வெற்றியின் அரசியல் உள்ளடக்கத்தை எண்ணிக்கை தீர்மானிப்பதில்லை.

**நம்பிக்கை நட்சத்திரமா ஆம் ஆத்மி ?**

பார்ப்பன பாசிசத்தின் தாக்குதல் காரணமாக நிலைகுலைந்தவர்களுக்கும், இந்த நாடாளு மன்ற ஜனநாயகத்துக்கு மேற்பட்ட ஒரு அரசியல் இலட்சியத்தை அடைய இயலும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களுக்கும், ஆம் ஆத்மி கட்சி புதிய நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரிகிறது.

''இந்த அரசமைப்பை அதன் கோட்பாடு களுக்கு ஏற்ப இயங்க வைக்க தீவிரமாக முயற்சிப்பதன் மூலம், அதன் அதிகபட்ச சாத்தி யங்களை கறந்து எடுப்பதுடன், அதன் முரண் பாடுகளையும் ஆம் ஆத்மி கட்சி அம்பலப் படுத்துகிறது.''



மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் போனதால் துண்டிக்கப்பட்ட இணைப்பை, மீண்டும் 'சட்டத்தை மீறி'க் கொடுக்கும் கேஜ்ரிவாலின் 'கலக' நடவடிக்கை. (கோப்புப் படம்)

''தண்ணீர், மின்சாரம், சாலை, மருத்துவம், கல்வி போன்ற மக்களின் வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கின்ற விசயங்கள் குறித்து முன்னெப்போதும் கண்டிராத வகையில் மக்களுக்கு அரசியல் கல்வி அளிக்கிறது.''

- இவை ஆம் ஆத்மி எனும் நம்பிக்கை நட்சத்திரத்தை விதந்து அறிவுத்துறையினர் தெரிவித்து வரும் கருத்துகளில் சில. நம்பிக்கையிழந்தவர்களின் நம்பிக்கையாகத்தான், ஆம் ஆத்மியைப் போன்ற கட்சிகள் ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களால் உருவாக்கப்படுகின்றன. ஆம் ஆத்மியின் முக்கியத் தலைவர்கள் அனைவரும் என்.ஜி.ஓ. க்கள் என்பதையும், கேஜ்ரிவால் முன்வைக்கின்ற அரசியல் 'மண்டபத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது' என்பதையும் ஏற்கெனவே பு.ஜ.வில் எழுதியிருக்கிறோம். (பார்க்க: பெட்டிச் செய்தி)

**புனித முதலாளித்துவம்?**

ஆம் ஆத்மியின் அரசியல் இதனைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. ''வர்க்கப் போராட்டம் இல்லாத வர்க்க அரசியல். இது சித்தாந்தங்கள் முடிவடைந்துவிட்ட காலம். நாங்கள் வலதும் இல்லை, இடதும் இல்லை. தனியார்மய எதிர்ப்பு, உலக வர்த்தக கழக எதிர்ப்பு தேவையில்லை. காரியம் நடப்பதற்கு எது பொருத்தமோ அதைச் செய்வோம்'' — இவையெல்லாம் ஆம் ஆத்மியின் 'நிலைப்பாடுகள்'.

இந்நிலைப்பாடுகளிலிருந்து மட்டும் அல்லாமல், டில்லி தேர்தல் வெற்றியை ஆம் ஆத்மி கட்சி எப்படி சாதித்தது என்பதை அவர்களுடைய நடைமுறையின் ஊடாகவே நாம் பரிசீலித்துப் பார்க்கலாம்.

தேர்தல் கட்சிகள் கையாளுகின்ற வழமையான சாதி, மத அரசியலை நிராகரித்து, குடிநீர், மின்சாரம், கல்வி, சுகாதாரம், போலீசு - அதிகார வர்க்கத் தொல்லைகள், குடிசைகளை அப்புறப்படுத்துதல் போன்ற மக்கள் பிரச்சினைகளை மையப்படுத்தி, ''வர்க்கம்'' என்ற முறையில் மக்களை அணுகியதாகவும் அதற்குக் கிடைத்த வெற்றிதான் இது என்றும் ஆம் ஆத்மி கூறிக் கொள்கிறது.

கேஜ்ரிவாலுக்கு இந்த 'வர்க்க அரசியல்' ஞானோதயம் வந்த கதை என்ன? ஊழல் எதிர்ப்பு இயக்கம் என்ற உலக வங்கியின் நிகழ்ச்சி நிரலை அன்னா ஹசாரேவின் போராட்டமாக வடிவமைத்த கேஜ்ரிவால், அரசியலை சாக்கடை என்று கூறிவந்தவர். அந்த ''சாக்கடை''யில்

# ஆம் ஆத்மி - அவதார ரகசியம்!

அன்னா ஹசாரேவின் ஊழல் ஒழிப்பு இயக்கமாக இருக்கட்டும், அதிலிருந்து கிளைத்து எழுந்த ஆம் ஆத்மி கட்சியாக இருக்கட்டும் — இவை சுயேச்சையாகவோ தற்செயலாகவோ பிறப்பெடுத்தவை அல்ல.

தனது உலகப் போர்த்தந்திரத்துக்குத் தேவைப்படும் நாடுகளில் தலையீடுகள் செய்வதற்கும், அரசியல் எழுச்சிகளையும் வண்ணப் புரட்சிகளையும் உருவாக்கி ஆட்சிக் கவிழ்ப்பு செய்வதற்கும், '80-கள் முதற்கொண்டே குடிமைச் சமூகங்களைத் தனது அரசியல் - அமைப்புக் கருவியாக அமெரிக்கா பயன்படுத்தி வந்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக கடந்த 25 ஆண்டுகளாகத் திணிக்கப்பட்டுவரும் கட்டுமான மறுசீரமைப்புக் கொள்கைகளின்படி, இந்தியா உள்ளிட்ட பின்தங்கிய நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளின் சட்ட திட்டங்கள், அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகார வர்க்கத்தினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அரசுசாரா நிறுவனங்களும் குடிமைச் சமூக அமைப்புகளும் அரசு அதிகாரத்தின் அங்கமாகியிருக்கின்றன.

முறைசார்ந்த அமைப்புகளான கட்சிகள் மற்றும் அதிகார வர்க்கத்தின் இலஞ்ச-ஊழல், கிரிமினல் நடவடிக்கைகள் காரணமாக அவற்றின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வேர்மட்ட ஜனநாயகம் (grassroot democracy) மக்களுக்கு அதிகாரத்தைக் கொண்டு சேர்த்தல் (Empowerment of people) என்ற பெயர்களில் குடிமைச் சமூக அமைப்புகள் இதனை நியாயப்படுத்திக் கொள்

இறங்குவது என்று முடிவு செய்ததும், ஊழலை மட்டும் சொல்லி ஓட்டு வாங்க முடியாது என்பதால், மக்கள் பிரச்சினைகளுக் காகப் போராடத் தொடங்கினார்.

> **மின் கட்டண உயர்வு, தண்ணீர் கட்டண உயர்வுக்கு எதிராகப் போராடிய கேஜ்ரிவால், அதற்கு அடிப்படைக் காரணமான தனியார்மயத்தை எதிர்த்துப் பேசவில்லை. இப்பிரச்சினைகளை "ஊழல் – முறைகேடுகளை அகற்றுதல் – வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டுதல்" என்று உலக வங்கி வடிவமைத்திருக்கும் சட்டகத்திற்குள் நிறுத்தினார்.**

மின்கட்டண உயர்வு, தண்ணீர் கட்டண உயர்வுக்கு எதிராகப் போராடிய கேஜ்ரிவால், அதற்கு அடிப்படைக் காரணமான தனியார் மயத்தை எதிர்த்துப் பேசவில்லை. ''மின்சாரத்துக்கு அநியாய விலை வைக்கும் கார்ப்பரேட் நிறுவனங் களை சி.ஏ.ஜி. யின் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும், வாட்டர் மாஃபியாவின் பிடியிலிருந்து தண்ணீர் விநியோகத்தை விடு விக்க வேண்டும்'' என்று கூறி இப் பிரச்சினைகளை ''ஊழல்-முறை கேடுகளை அகற்றுதல் - வெளிப் படைத்தன்மையை நிலை நாட்டுதல்'' என்று உலக வங்கி வடிவமைத்திருக்கும் சட்டகத் துக்குள் நிறுத்தினார்.

இருப்பினும், தனது 49 நாள் ஆட்சியில், கார்ப்பரேட் நிறுவனங்கள் தணிக்கைக்கு உட் பட மறுத்தால் உரிமத்தை ரத்து செய்வதாக அறிவித்தது, மின் கட்டணக் குறைப்பு ஆகிய கேஜ்ரிவாலின் நடவடிக்கைகள் தனியார்மய எதிர்ப்பாளர் போன்ற தோற்றத்தை மக்களிடம் ஏற்படுத்தின. ஆனால் தனது ''கலக'' நடவடிக்கைகளின் ஊடாக மின் உற்பத்தி, விநியோகம், பயன்பாடு, கட்டண நிர்ணயம் ஆகிய வற்றைத் தீர்மானிக்கும் அடிப் படைகளையோ, ஒழுங்குமுறை ஆணையத்தையோ, கட்டுமான மறுசீரமைப்பு கொள்கையையோ அவர் ஒருபோதும் கேள்விக் குள்ளாக்கியதில்லை.

இவற்றை மக்களுக்குப் புரிய வைப்பதன் ஊடாகவும் போராடுவதன் ஊடாகவும்தான் அதிகாரம் யாரிடம் இருக்கிறது என் பதை மக்கள் புரிந்து கொள்கிறார் கள். அத்தகைய புரிதலின் வழியாகத்தான் மக்கள் அதிகாரம் என்பதன் அவசியத்தையும் உணர்ந்து கொள்கிறார்கள். ஆனால், தனியார்மயம் என்ற பிரச் சினையையே பேசாமல் தவிர்ப் பதன் மூலம், ஆம் ஆத்மி கட்சி, தனியார்மயக் கொள்கையை இயல் பானதாக்குகிறது. கட்டணக் குறைப்பைத் தனது சாதனையாகக் காட்டி, மக்களைச் செயலற்ற பார் வையாளர்களாக இருத்தி வைக்கிறது.

லோக்பாலை உருவாக்குவ தன் மூலம் ஊழலை ஒழித்து அரசமைப்பைத் தூய்மைப்படுத்த முடியும் என்ற பிரமையை உருவாக்கியதைப் போலவே, சமூக நலனுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு, இயங்கும் ''புனித முதலாளித்துவத்தை'' உருவாக்க முடியும் என்ற பொய்மையையும் பரப்புகிறது ஆம் ஆத்மி. தோற்றுப் போய் நிலைகுலைந்து மக்களின் நம்பிக்கையை

கின்றன. கேஜ்ரிவால் முன்வைக்கும் ஜன் லோக்பால் முதல் மொகல்லா சபாக்கள் வரையிலான ''ஜனநாயக'' அமைப்புகள் இந்த அடிப்படையிலானவைதான்.

கடந்த 25 ஆண்டு களாக அமல்படுத்தப் பட்டு வரும் தனியார் மய, தாராளமய, உலக மயக் கொள்கை, நமது நாட்டின் அரசியல் - பொருளாதார - சமூகச் சிக்கல்களை மேலும் கடுமையாக்கி முற்றச் செய்திருக்கின்றன. அரசியல் - பொருளாதார - சமூக கட்டமைப்பு அசா தாரணமான நெருக்கடி யில் சிக்கி அதன் உறுப்பு கள் அனைத்தும் அவற் றுக்குரியவையாக வரை யறுக்கப்பட்ட பணிகளை ஆற்றாமல் எதிர்நிலை சக்திகளாக மாறிவிட்டன. இந்தக் கட்டமைப்பை நியாயப்படுத்தி வந்த ஆளும் வர்க்க சித்தாந்தங்களும் நெறிமுறைகளும் தோற்றுப்போய் அரசு மற்றும் ஆளும் வர்க்கங்கள் ஆளும் தகுதியை இழந்து விட்டன. இத்தகைய சூழ் நிலையில் வெடித் தெழும் மக்கள் போராட் டங்களை நிறுவனமயப் படுத்துவதற்கும், இந்த அரசமைப்பின் மீது நம் பிக்கை இழந்துவிட்ட மக் களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கும் என்.ஜி.ஓ. க்கள் எடுத் திருக்கும் அரசியல் அவ தாரம்தான் ஆம் ஆத்மி கட்சி. ●

ஆர்.எஸ்.எஸ்.-இன் பின்புலத்தோடு, கார்ப்பரேட் ஊடகங்களால் தயாரித்து வழங்கப்பட்ட ''ஊழலுக்கு எதிரான இந்தியா'' இயக்கம் டெல்லி - ஜந்தர் மந்தரில் நடத்திய போராட்டத்தில் கிரண் பேடி, கேஜ்ரிவால் மற்றும் அன்னா ஹசாரே. (கோப்புப் படம்)



இழந்திருக்கும் இந்த அரசமைப்பைச் சீராக்க முடியும் என்ற பிரமையையும் தோற்றுவிக்கிறது.

ஆகவே, ''ஆம் ஆத்மி மோடியை வெற்றி கொண்டு விட்டது'' என்று மட்டும் இத்தேர்தல் முடிவை மதிப்பிடுவது தவறு. காங்கிரசு உள்ளிட்ட எல்லா ஓட்டுக் கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்து, மோடியின் மீதும் வெறுப்புற்றிருந்த பெரும்பான்மையான மக்களின் மனதில், தேர்தல் அரசியல் மீதும், இந்த அரசமைப்பின் மீதுமான நம்பிக்கையைப் புதுப்பிப்பதில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பதே நம் கவனத்துக் குரியது.

### இந்த அரசமைப்பை அம்பலப்படுத்துகிறதா, பலப்படுத்துகிறதா?

வேறொரு கோணத்திலிருந்தும் இதனைப் பார்க் கலாம். ''பிப்ரவரி 2014-இல், ஜன் லோக்பால் மசோதா நிறைவேற்றுவதை காங்கிரசும் பா.ஜ.க.வும் தடுத்த காரணத்தினால் பதவி விலகுவதாக''க் கூறினார் கேஜ்ரிவால். ''49 நாட்களில் பதவியை ராஜினாமா செய்த ஓடுகாலி'' என்று பாரதிய ஜனதா சாடியது. மக்களிடம் இந்த விமரிசனம் எடுபட்டதென்னவோ உண்மைதான். 2014 நாடாளுமன்றத் தேர்தலில் டில்லியில் ஆம் ஆத்மி தோற்றது.

சற்று யோசித்துப் பாருங்கள். ஜன் லோக்பால் சட்டத்தை முறியடிக்க பா.ஜ.க.வும் காங்கிரசும் கூட்டு சேர்ந்தன. கட்டணக் குறைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மின் உற்பத்தி நிறுவனங்கள் டில்லியை இருளில் அமிழ்த்தின. கீழ்நிலை போலீசாரே ஆம் ஆத்மி அரசை மிரட்டினார்கள் - இந்த அனுபவங்களிலிருந்தெல்லாம் தனது ராஜினாமா முடிவின் நியாயத்தை அவர் மக்களுக்கு விளக்கியிருக்கலாம். நாடாளுமன்ற அரசியலின் வரம்பை புரிய வைத்திருக்கலாம்.

மாறாக, ''இனி ஒரு போதும் ராஜினாமா செய்ய மாட்டேன்'' என்று தெருத்தெருவாகச் சென்று மன்னிப்பு கேட்டதன் பொருள் என்ன? ''மக்களிடம் பணிவாக மன்னிப்பு கேட்டார்'' என்று கேஜ்ரிவாலின் இந்த நடவடிக்கையைப் புகழ்ந்தன ஊடகங்கள்.

உண்மையில் அந்த மன்னிப்பு மக்களிடம் கேட்கப் பட்டதல்ல. ஓட்டுப்பொறுக்கி அரசியலுக்கு வந்து விட்டு, ஒழுங்காக அதன் வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு நடக்காமல், 'வரம்பு மீறி பாலிடிக்ஸ் பண்ணிய குற்றத் துக்காக' அவர் ஆளும் வர்க்கத்திடம் மன்னிப்புக் கேட்டார் என்பதே உண்மை.

தற்போது தேர்தல் வெற்றிக்குப் பிறகு, ''நாங்கள் அகங்காரம் கொள்ள மாட்டோம்; பணிவாக நடந்து கொள்வோம்'' என்று கேஜ்ரிவால் பேசியிருப்பதும் மக் களுக்குத் தெரிவிக்கும் செய்தி போலத் தோன்றினாலும், உண்மையில் அது ஆளும் வர்க்கத்துக்கும் அதிகார வர்க்கத்துக்கும் அவர் மறைமுகமாக முன்வைக்கும் விஞ்ஞாபனம்.

### மக்கள் என்ற முகமூடி!

தனது சந்தர்ப்பவாதத்தை மறைக்கும் முகமூடியாக வும் மக்களைப் பயன்படுத்திக் கொள்கிறார் கேஜ்ரிவால். 2014 ஜனவரி மாதம், காங்கிரசு ஆதரவு பெற்று ஆட்சி அமைப்பதற்கு முன்னர், கேஜ்ரிவால், ''மக்களைக் கலந் தாலோசித்தார்''. அதாவது மக்கள் கொள்கை வழி நடப்பதை விரும்புகிறார்களா, காங்கிரசு ஆதரவுடன் ஆட்சியமைக்கும் சந்தர்ப்பவாதத்தை விரும்புகிறார்களா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப முடிவெடுத்தார். 2014 பிப்ரவரியில் ராஜினாமா செய்வ தற்கு முன்னரும் அதேபோல ''மக்களைக் கலந் தாலோசிக்கத் தவறி விட்டேன்'' என்பதுதான் கேஜ்ரி வாலின் சுய விமரிசனம்.

இந்த போலி ஜனநாயகத்தின் மீதான பிரமை, தேச வெறி, தேச முன்னேற்றம் குறித்த தப்பெண்ணங்கள், சாதி-மதவெறி, ஆணாதிக்கம் உள்ளிட்ட பல்வேறு ஆளும் வர்க்கக் கருத்துகளால் மக்கள் பீடிக்கப்பட்டிருக் கிறார்கள். மக்களை அவற்றிலிருந்து விடுவிப்பதே ஜன நாயக விழுமியங்களில் நம்பிக்கை கொண்ட ஒரு கட்சியின் கடமை. ஆனால், மக்களிடம் பணிவாக நடந்து கொள்ளும் தோரணையில், ''மக்களின் சொல் படி'' ஆளும் வர்க்கக் கருத்துகளை வழிமொழிகிறது ஆம் ஆத்மி கட்சி.



நேரடியாகச் சொல்வதென்றால், மக்களின் பெரும்பான்மையினர் இந்து மதவாதத்துக்கு ஆட்பட்டிருந்தால், சாதி ஆதிக்கத்தை விரும்பினால், தேச வெறிக்கு ஆட்பட்டிருந்தால் அவற்றைக் கேள்விக்குள்ளாக்குவது ஆம் ஆத்மியின் அரசியல் அல்ல. முசாபர்பூர் குறித்து கேஜ்ரிவால் மவுனம் சாதித்தார். மோடியை ''மக்கள் செல்வாக்கு பெற்ற தலைவர்'' என்றார். காப் பஞ்சாயத்துகளை ''நமது பாரம் பரிய கலாச்சார அமைப்புகள்'' என்றார். காஷ்மீரில் நடக்கும் இராணுவ அடக்குமுறையை நியாயப் படுத்தினார்.

**எது வர்க்க அரசியல்?**

வர்க்க அரசியல், மக்கள் அதிகாரம், அமைப்பு முறையை (system) கேள்விக்குள்ளாக்குதல் என்பன போன்ற கம்யூனிச அரசியல் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதன் வாயிலாக, பயங்கரமானதொரு யுத்தத்தை தொடங்கவிருப்பதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கிக் கொண்டே, இந்த அரசமைப்புக்கு சலாம் வரிசை எடுத்துக் கொண்டிருக்கிறது ஆம் ஆத்மி கட்சி.

பாரதிய ஜனதா மற்றும் காங்கிரசு கட்சிகளின் ஆளும் வர்க்க அரசியல் கருத்துகளை வழிமொழிந்து கொண்டே, சாதி-மதம் என்ற சட்டகத்திற்குள் சுழன்று கொண்டிருக்கும் தேர்தல் அரசியலை, அதிலிருந்து நகர்த்திச் சென்று, தண்ணீர், மின்சாரம், சுகாதாரம் என்று மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நோக்கித் திருப்பி சாதனை புரிந்திருப்பதாகவும், இது தான் வர்க்க அரசியல் என்றும் ஆம் ஆத்மி சித்தரித்துக் கொள்கிறது.

> **இந்த அரசமைப்பு ஆளும் வர்க்கத்தின் நலனுக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்கு எதிராகவும் எந்தெந்த கட்சிகள், கொள்கைகள், நிறுவனங்கள் வழியாக எப்படியெல்லாம் செயல்படுகிறது என்ற புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தி, தனது வர்க்க நலனுக்காகப் போராடும் ஓர்மையை மக்களுக்கு ஏற்படுத்துவதே வர்க்க அரசியல்.**

உழைக்கும் வர்க்கத்தின் அன்றாடப் பிரச்சினைகளைப் பேசுவதும் அவற்றில் சிலவற்றை தீர்த்துக் கொடுப்பதுமே வர்க்க அரசியல் அல்ல. (இதை ஆம் ஆத்மியை விட பலநூறு மடங்கு அதிகமாக போலி கம்யூனிஸ்டு கட்சியினர் செய்திருக்கிறார்கள்.) இந்த அரசமைப்பு ஆளும் வர்க்கத்தின் நலனுக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்கு எதிராகவும் எந்தெந்த கட்சிகள், கொள்கைகள், நிறுவனங்கள் வழியாக எப்படியெல்லாம் செயல்படுகிறது என்ற புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தி, தனது வர்க்கத்தின் நலனுக்காகப் போராடும் ஓர்மையை மக்களுக்கு ஏற்படுத்துவதே வர்க்க அரசியல். சாதி ஒழிப்பு, இந்து மதவெறி எதிர்ப்பு, ஆணாதிக்க எதிர்ப்பு, தேசிய இன, மொழி உரிமைகளை நிலைநாட்டுதல் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியதுதான் வர்க்க அரசியல்.

தனது வர்க்க நலன் எது என்பதைப் புரிந்து கொள்ளாத, தனது எதிரிகள் யார் என்பதை அடையாளம் காண வியலாத, அதற்கான போராட்டத்தில் ஈடுபடாத மக்களின் கையில் அதிகாரம் கிடைக்குமாயினும், அது ஏற்கெனவே உள்ள சமூக ஆதிக்க சக்திகளின் நலனுக்குத் தான் பணிவிடை செய்யும். ஆம் ஆத்மி முன்வைக்கும் 'மக்கள் அதிகாரம்' எனப்படுவதும் மொகல்லா சபாக்களும் அத்தகைய போராட்டத்தின் ஊடாக உருவானவை அல்ல, அப்படிப் போராடுவதும் அவற்றின் நோக்கமல்ல.

மாறாக, அவை இந்த அரசமைப்புக்கு எதிரான போராட்டம் எழும்பாமல் தடுப்பதற்கான பாதுகாப்பு வால்வுகள். மக்களிடம் மதிப்பிழந்து போன இந்த அரசமைப்பைப் பாதுகாப்பதற்காகவும், பஞ்சாயத்து மட்டம் வரை தங்களது நேரடித் தலையீட்டை உத்திரவாதப் படுத்திக் கொள்வதற்காகவும், வேர்மட்ட ஜனநாயகம் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் நிறுவனங்கள்.

இந்திய அரசியல் சட்டத்தின் 73 மற்றும் 74-வது சட்ட திருத்தங்கள் கூறுகின்ற ''அதிகாரப் பரவலாக்கம்'' என்ற இட்லி மாவைத் தான் கேஜ்ரிவால் ''ஸ்வராஜ்'' ''மொகல்லா சபா'' என்ற பெயர்களில் ஊத்தப்பமாகவும், தோசையாகவும் ஊற்றியிருக்கிறார் என்றும், இதற்காக கேஜ்ரிவாலை ''நகர்ப்புற நக்சல்'' என்றெல்லாம் சித்தரிப்பது அபாண்டமானதென்றும் மோடி ஆதரவு அதிதீவிர வலதுசாரிப் பத்திரிகையான ஸ்வராஜ்யா சுட்டிக் காட்டுகிறது.

**பழைய மீட்பரின் கோட்டும், புதிய மீட்பரின் மப்ளரும்!**

இவையெல்லாம், ஆம் ஆத்மியின் அதிசயிக்கத்தக்க வெற்றி கண்டு மனக்கிளர்ச்சி கொண்ட அறிஞர் பெருமக்கள் அறியாத உண்மைகளல்ல. எனினும், திடீர்சாம்பார் மீதும் உடனடி லாட்டரி மீதும் அறிவாளிகள் மையல் கொள்வதொன்றும் புதிய விடயமில்லையே! எட்டு மாதங்களுக்கு முன் மோடியை மீட்பனாகக் கருதிய டில்லி மக்கள் இன்று கேஜ்ரிவாலை மீட்பனாக கருதியிருக்கிறார்கள். கேஜ்ரிவால் தங்களை எப்படி மீட்கப் போகிறார் என்று புரிந்து அவர்கள் வாக்களிக்கவில்லை. மீட்பார் என்ற நம்பிக்கையில் வாக்களித்திருக்கிறார்கள். மோடி என்ற மீட்பரை நம்பியதைப் போலத்தான்!

ஆம் ஆத்மி, கொள்கை தேவையில்லையென்று கூறும் கட்சி. உட்கட்சித் தேர்தலோ ஜனநாயகமோ இது வரை இல்லை. தனது உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லக்கடமைப்பட்டிராத ஒரு தலைவர், மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்ட ஒரு ஆட்சியை தான் வழங்கப்போவதாகக் கூறுகிறார். கொள்கைக்கும் ஜனநாயகத்துக்கும் மாற்றாக கேஜ்ரிவாலின் நேர்மை முன்நிறுத்தப்படுகிறது. மோடியும் கூட இப்படித்தானே முன்நிறுத்தப்பட்டார்.

ஆடம்பர ஆத்மியின் கோட்டுக்கும் ஆம் ஆத்மியின் மப்ளருக்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. மோடியின் கோட்டை டில்லி மக்கள் கழற்றினார்கள். கேஜ்ரிவாலின் மப்ளரை அக்கட்சியின் முரண்பாடுகளே கழற்றிவிடும்.

● **மருதையன்**

மோடி ஆட்சியில்...

# யாருக்கு நல்ல காலம்! யாருக்கு கேடுகாலம்!!

**இந்து மதவெறியர்களும் அவர்களுக்கு நெருக்கமான அரசு பயங்கரவாதிகளும் சிறையிலிருந்து வெளியே வர, இக்கும்பலை எதிர்த்துப் போராடுபவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள்.**

''நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது'' என்று உடுக்கையடித்தார், மோடி. தனது இந்துத்துவ - பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தை மூடிமறைத்துக்கொண்டு வளர்ச்சி, முன்னேற்றம் பேசினார். நாட்டு மக்களும் அதை நம்பி பெருவாரியாக வாக்களித்து அவரைப் பிரதமர் ஆக்கினார்கள்.

அதன் பிறகு, ''நல்ல காலம் பொறந்து விட்டது, நல்ல காலம் பொறந்து விட்டது'' என்ற குரல்கள் தொடங்கி, இப்போது அவை ஓங்கி ஒலிக்கின்றன. வாக்களித்த மக்களிடமிருந்து அல்ல. இந்துத்துவ - பார்ப்பன பாசிச பயங்கரவாதிகளிடமிருந்து. இந்தியாவை இந்து நாடாக மாற்றியே தீருவோம்; இந்து ராஜ்ஜியம் அமைத்தே தீருவோம்; இராமர் கோவில் கட்டுவோம், கோட்சேவுக்குக் கோவில் கட்டுவோம், சிலை வைப்போம்; கிறித்துவர்களையும் இசுலாமியர்களையும் தாய் மதத்துக்குத் திரும்பச் செய்வோம்; அவர்களின் வழிபாட்டுத் தலங்களைத் தாக்குவோம்; அவர்களின் அடையாளங்களை அழிப்போம்; சமஸ்கிருதத்தைத் திணிப்போம்; இந்துப் பெண்கள் 4 குழந்தைகள், இல்லை, இல்லை 10 குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்; காதலர் தினங்களில் கட்டாயத் தாலி கட்ட வைப்போம்... என்று பெருங்கூச்சல் போட்டு, அவர்களுக்கு நல்ல காலம் பொறந்து விட்டதைக் கொண்டாடுகிறார்கள்.

இதற்கெல்லாம் மோடி என்ன பதில் சொல்லுகிறார் என்று கேட்டு எதிர்க் கட்சிகள் இறைஞ்சுகின்றன. இவை கண்டு மோடி மவுனம் காக்கக் கூடாது, இந்துத்துவ வாதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும், கண்டிக்க வேண்டும் என்று ஊடகங்கள் கெஞ்சுகின்றன. அதற்கு ஆதரவாக ஒபாமாவை 'அழைக்கிறார்கள்'. இவற்றுக்கெல்லாம் மவுன சாட்சியாக இருக்கும் மோடி சத்தம் போடாமல் வேறு சில வேலைகளைச் செய்கிறார். 'நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது' என்று யாருக்குச் சொன்னார் என்பதைச் செயலில் காட்டுகிறார்.

2002 கோத்ரா ரயில் எரிப்புக்குப் பிறகு இசுலாமியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட மதவெறிப் படுகொலைகளை நிகழ்த்திய வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற மோடியின் முன்னாள் அமைச்சர் மாயா கோட்நானியைப் பிணையில் விடுதலை செய்துவிட்டார். மோடி - அமித் ஷா கும்பலின் உத்திரவின் பேரில் இஷ்ரத் ஜஹான் என்ற கல்லூரி மாணவியையும் மேலும் மூன்று இசுலாமியர்களையும் பிடித்துப் போலி என்கவுண்டர்களை நடத்தியதற்காகவும், சொரா புதீனையும் அவரது மனைவி கவுசர் பீயையும் கொன்று விட்டு அதற்குச் சாட்சியாக இருந்த துளசிராம் பிரஜாபதியையும் போலி என்கவுண்டர் செய்ததற்காகவும் சி.பி.ஐ.யின் விசாரணைக் கைதியாக இருந்த குஜராத் கிரிமினல் போலீசு அதிகாரிகளை

குஜராத் போலி என்கவுண்டர்களுக்கு மூளையாகச் செயல்பட்ட அரசு பயங்கரவாத மிருகம் டி.ஜி. வன்சாரா மோடி அரசால் பிணையில் விடுவிக்கப்பட்டதும், சிறைச்சாலை முன்பாக தாரை - தப்பட்டை முழங்க சங்கப் பரிவாரங்கள் அளித்த வரவேற்பு.



விடுதலை செய்து, பதவியமர்த்தியுள்ளது; கூடவே சிலருக்குப் பதவி உயர்வும் சலுகைகளும் வழங்கியுள்ளது. இந்தப் போலி என்கவுண்டர் வழக்குகளை விசாரித்து வரும் மும்பை சி.பி.ஐ. நீதிமன்றம், மும்பையை விட்டு வெளியே போகக் கூடாது எனத் தடுத்து வைத்திருக்கும் கிரிமினல் போலீசு அதிகாரி ராஜ்குமார் பாண்டியனுக்காக மும்பையிலேயே பதவியொன்றை உருவாக்கியது. இந்த வழக்குகளை விசாரித்து வரும் போலீசு அதிகாரிகளுக்கு மேலான சட்டம்-ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி.யாக இன்னொரு கிரிமினல் போலீசு அதிகாரி பி.பி. பாண்டேவை நியமித்துள்ளது. கிராமப்புற சுகாதார செயல் அதிகாரியாக இன்னொரு கிரிமினல் போலீசு அதிகாரி விபுல் அகர்வாலை நியமித்துள்ளது. இந்த வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பா.ஜ.க. தலைவர் அமித் ஷாவை சி.பி.ஐ. நீதிமன்றம் விடுவித்துவிட்டது.



நரோடா பாட்டியா வழக்கில், 26 ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, இப்போது மோடி அரசால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குஜராத்தின் முன்னாள் அமைச்சர் மாயா கோட்நானி.


இவர்களில், குஜராத் போலி என்கவுண்டர்களுக்கு மூளையாகச் செயல்பட்ட மனித மிருகம் டி.ஜி. வன்சாரா, மோடியின் விசுவாச வேட்டை நாயாக விளங்கியவர். தாரை - தப்பட்டை முழங்க, சங்கப் பரிவாரங்கள் திரண்டு சிறை முன்பு வரவேற்கப்பட்ட டி.ஜி. வன்சாரா பத்திரிக்கையாளரிடம் பெருமைபொங்கக் கூவினார்: (குஜராத்) ''என்கவுண்டர் போலீசுக்காரர்களுக்கு நல்ல காலம் மீண்டும் வந்துவிட்டது!'' தொடர்ந்து தமது எல்லாக் கிரிமினல் குற்றங்களையும் தேச நலனுக்காகச் செய்தவைகளென நியாயப்படுத்தினார். என்கவுண்டர்கள் எல்லாம் உண்மையானவை, தன் மீதான வழக்குகளும், விசாரணைகளும்தான் போலியானவை; அந்தப் பயங்கரவாதிகளைக் கொல்லாமலிருந்தால் இன்னொரு காஷ்மீர் உருவாகியிருக்கும் என்று மோடியின் குரலை எதிரொலித்தார்.

ஆனால், இதே வன்சாரா தான் 2013 மார்ச்சில் குஜராத் அரசுக்குப் பதவி விலகல் கடிதம் ஒன்றை எழுதி, அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதில், ''மோடி தலைமையிலான குஜராத் அரசாங்கத்தில் போலீசு அமைச்சராக இருந்த அமித் ஷாவின் உத்திரவின் பேரில், அதன் விசுவாச படையினராகத்தான் எல்லா என்கவுண்டர்களையும் செய்தோம். அவரது நிர்வாகக் குளறுபடிகளால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 32 போலீசு அதிகாரிகளையும் குஜராத் அரசாங்கம் காப்பாற்றும் என்று நம்பியிருந்தோம். இப்போதைய போக்கில் சாவின் பிடியில்தான் நாங்கள் தள்ளப்படுவோம். எங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் நான்கு போலி என்கவுண்டர் கொலைகளும் குஜராத் அரசாங்கத்தின் கொள்கைப்படி மேலிடத்தில் இருந்து நேரடி உத்திரவு, வழிகாட்டுதல், கண்காணிப்பின் கீழ் செயல்படுத்தப்பட்டவைதாம். அதனால் காந்தி நகருக்குப் பதிலாக இந்த அரசாங்கம் நவமும்பையில் உள்ள தலோஜா மத்திய சிறையிலோ, அகமதாபாத்திலுள்ள சபர்மதி மத்திய சிறையிலோ இருக்க வேண்டும்'' என்று ஆத்திரத்தைக் கொட்டினார்.

இந்திய 'தேசத்தை' பாதுகாப்பதற்காக, தான் போராடி வருவதாகவும் அதனால் தனது உயிருக்கு இசுலாமியப் பயங்கரவாதிகளால் ஆபத்துக்கள் சூழ்ந்திருப்பதாகவும் தொடர்ந்து நாடகமாடி போலி என்கவுண்டர் செய்வித்த மோடி-அமித் ஷா கும்பல், மத்தியிலும் ஆட்சியைப் பிடிக்க எத்தணித்துத் கொண்டிருந்த வேளையில் எட்டாண்டுகளாகச்

பிணையில் விடுவிக்கப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டுள்ள குஜராத்தின் கிரிமினல் போலீசு அதிகாரிகளான பி.பி. பாண்டே, ராஜ்குமார் பாண்டியன் மற்றும் விபுல் அகர்வால்: மோடி-அமித்ஷா கும்பலின் உத்தரவின் பேரில் குஜராத்தில் பல போலி என்கவுண்டர்களை நடத்திய அரசு பயங்கரவாதிகள்.







சிறைப்பட்டிருக்கும் தம்மைக் கவனிக்கவில்லை என்ற ஆத்திரத்தில் வெடித்த வன்சாரா வெளிப்படுத்திய உண்மைகள், இவை. இப்போதும் அவர் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கவில்லை.

மிகச்சரியாகச் சொல்லுவதானால், இப்போது தனது எதிராளிகளைச் சிறையில் தள்ளி வதைக்க எத்தணிக்கும் அதேவேளையில், மோடி அவரது அரசியல் குற்றக் கூட்டாளிகளின் உருட்டல், மிரட்டல், பிளாக்மெயில்களில் சிக்கிக் கொண்டுள்ளார். வளர்ச்சி - முன்னேற்றம் என்ற முக்காடு போட்டு இந்துத்துவாவை ஒளித்து வைத்துக்கொண்டு, தனது ஆட்சி அதிகாரத்துக்குப் பாதிப்பு வராமல் காத்துக்கொள்ளும் மோடியின் தந்திரத்துக்கு இடையூறாக, அவர் ஆட்சியைக் கைப்பற்றவும் அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் முட்டுக்கொடுத்த ஆர்.எஸ்.எஸ். - இந்துத்துவா கும்பலின் உருட்டல், மிரட்டல், பிளாக்மெயில். இசுலாமிப் பயங்கரவாதிகளின்தாக்குதல்களில் இருந்து நாட்டைக் காக்கும் நாயகனாக மோடியைச் சுற்றி ஒளி வட்டம் போடுவதற்காக போலி என்கவுண்டர்களை அரங்கேற்றிய போலீசு கிரிமினல்கள் அந்த ஊழியத்துக்கான விலையைக் கேட்டு செய்வது, இன்னொரு உருட்டல், மிரட்டல், பிளாக்மெயில்.


குஜராத்தின் குல்பர்க் சொசைட்டி வளாகத்தில் நடந்த இந்துவெறி பாசிசப் படுகொலை வழக்கைத் தொடர்ந்து நடத்திய 'குற்றத்துக்காக', மோடி அரசால் பொய்வழக்கு சோடிக்கப்பட்டு கிரிமினல் குற்றவாளியாக்கப்பட்டுள்ள தீஸ்தா செதல்வாட்.

2002 கோத்ரா ரயில் எரிப்பைத் தொடர்ந்து தான் கட்டவிழ்த்துவிட்ட படுகொலைகளை விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றம் அமைத்த பார்ப்பன சிறப்பு விசாரணைக் குழுவைச் சரிகட்டி மோடி தப்பித்துக் கொண்டார். ஆனால், மேற்கண்ட உருட்டல், மிரட்டல், பிளாக்மெயில்களுக்குப் பணிந்து மோடி-அமித் ஷா கும்பல் செய்யும் ஏற்பாடாகத்தான் இந்த 'நல்லகாலம் பிறந்துள்ளது'.

குஜராத்தில் போலி என்கவுண்டர்களைத் திட்டமிட்டு நிகழ்த்திய கிரிமினல் பயங்கரவாதப் போலீசு - இந்துத்துவா பாசிசக் கூட்டுக் கொலைகாரர்களுக்குத்தான் நல்லகாலம் பிறந்து விட்டது. அதனால்தான் மோடி - அமித் ஷா குற்றக்கும்பல் ஆட்சிக்கு வந்ததும் எவ்வித எதிர்ப்புமில்லாமல் ஒவ்வொருவராக வெளிவருவதும் சலுகைகளோடு அதிகாரத்தில் அமர்த்தப்படுவதும் அரங்கேறுகிறது. 2002 குஜராத் படுகொலைகளை நிகழ்த்திய அந்த கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு மிகச்சிறிய அளவுக்குக்கூட எதிர்ப்புக் காட்டி அம்பலப்படுத்தும் நேர்மையான சில போலீசு அதிகாரிகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் கெட்ட காலம் தொடங்கி விட்டது.

ம.பி.யில் பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் கார்ப்பரேட் மின் நிறுவனங்களை எதிர்த்த 'குற்றத்துக்காக', மோடி அரசால் தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்டுள்ள ''கிரின் பீஸ்'' நிறுவனத்தின் பிரச்சாரகர் பிரியா பிள்ளை.


மோடி - அமித் ஷா கும்பல் மத்தியில் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பே சிறீகுமார், ராகுல் சர்மா, சஞ்சீவ் பட் போன்ற போலீசு அதிகாரிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தியும், பொய் வழக்குகள் போட்டும் பழிவாங்கும் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. 2002 குஜராத் படுகொலைகளின்போது குல்பர்க் சொசைட்டி வளாகத்தில் அப்பாவி இசுலாமியர்களுக்கு அடைக்கலம் கொடுத்த முன்னாள் காங்கிரசு எம்.பி. இசான் ஜாஃப்ரியோடு பலரையும் உயிரோடு கொளுத்திய வழக்கை விடாமல் நடத்தியவர், அரசுசாரா தொண்டு நிறுவனம் ஒன்றின் பொறுப்பாளரான தீஸ்தா செதல்வாட். அவரும் அவரது கணவர் ஜாவத் ஆனந்தும் குல்பர்க் சொசைட்டி வளாகத்தில் ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதாகக் கூறி நன்கொடை வசூலித்து, கையாடல் செய்துவிட்டதாக பொய் வழக்குப் போட்டுள்ளது, மோடி- அமித் ஷா கும்பல். அதைக் கிரிமினல் குற்றச்சாட்டாக்கி அவ்விருவரையும் கைது செய்து சிறையிலடைக்கவும் எத்தணிக்கிறது.

முந்தைய காங்கிரசு ஆட்சியில் சுற்றுச்சூழல் பாதிப்புக் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அம்பானி, அதானி போன்ற தரகு முதலாளிகளின் 155 தொழிற்சாலைத் திட்டங்களுக்கு மோடி- அமித் ஷா கும்பல் ஆட்சிக்கு வந்ததும் அவசர அவசரமாக அனுமதி வழங்கியது. அத்திட்டங்களுக்கு எதிர்ப்புக் காட்டிவந்த ''கிரீன் பீஸ்'' என்ற சர்வதேசச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொண்டு நிறுவனத்தின் மீது அக்கும்பல் தனது தாக்குதலைத் தொடுத்துள்ளது. மத்தியப் பிரதேசத்திலுள்ள மஹான் நிலக்கரி சுரங்கத்தில் இண்டால்கோ மற்றும், எஸ்ஸார் ஆகிய இரண்டு கார்ப்பரேட் தரகு மின் உற்பத்தி நிறுவனங்கள் பழங்குடி மக்களின் வனவுரிமைகளை மீறி அவர்களை வெளியேற்றுகின்றன. அது குறித்து இங்கிலாந்து நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்ற இலண்டனுக் குப் புறப்பட்ட ''கிரீன்பீஸ்'' நிறுவனத்தின் மூத்த பிரச்சாரகர் பிரியா பிள்ளையைத் தேடப்படும் நபராக அறிவித்துத் தடுத்துவைத்துள்ளது, மோடி- அமித் ஷா கும்பல்.

இதிலிருந்து தெரிகிறதா அண்டப் புளுகன் மோடி, ''நல்ல காலம் பொறக்குது!'' என்று சொன்னது, யாருக்கென்று!

● ஆர்.கே.

# தெருக்களில் இந்து பயங்கரவாதிகள்! பதவிகளில் அரசு பயங்கரவாதிகள்!!

**குஜராத்தில் நடந்த போலி மோதல்கொலை வழக்குகளிலிருந்து அமித் ஷா விடுவிக்கப் பட்டிருப்பதையும் வன்சாரா உள்ளிட்ட போலீசு அதிகாரிகளுக்குப் பிணை வழங்கப் பட்டிருப்பதையும் "அநீதி" என்ற வார்த்தைக்குள் மட்டும் அடக்கிவிட முடியாது.**

நரேந்திர மோடியின் கையாளும் பா.ஜ.க.-வின் தேசியத் தலைவருமான அமித்ஷா, சொராபுதீன் போலி மோதல் கொலை வழக்கிலிருந்து, விசாரணை தொடங்கும் முன்பே விடுவிக்கப்பட்டுள்ளார். இப்போலி மோதல்கொலை வழக்கை விசாரித்து வரும் மும்பை சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்ற நீதிபதி கொசாவி, ''அரசியல் காரணங் களுக்காக அமித்ஷா இந்த வழக்கில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும், அவருக்கெதிரான குற்றச் சாட்டுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ள முடி யாததாக, பொது அறிவுக்கு எதிரானதாக உள்ள தாகவும்'' கூறி அவரை விடுவித்துள்ளார். இப் போலி மோதல்கொலை வழக்கு குறித்து இதுகாறும் மோடி - அமித்ஷா கும்பல் என்ன கூறி வந்ததோ, அதனையே தீர்ப்பாக வாந்தியெடுத்திருக்கிறது, சி.பி.ஐ. நீதிமன்றம்.

அமித் ஷாவின் அரசியல் ஆதரவு, பக்கபலத்தோடு குஜராத் மற்றும் இராசஸ்தான் மாநிலங் களில் கட்டப்பஞ்சாயத்து, தொழிலதிபர்களை மிரட்டிப் பணம் பறிப்பது மற்றும் அமித்ஷா கும்பல் இடும் வேலைகளைச் செய்து முடிப்பது என குட்டி தாதாவாக சொராபுதீன், வலம் வந்துகொண்டிருந்தான். குஜராத் தைச் சேர்ந்த பாப்புலர் பில்டர்ஸ் என்ற கட்டிட ஒப்பந்த நிறுவனத் தின் அகமதாபாத் அலுவல கத்தை, சொராபுதீன் தலை மையில் ஒரு கும்பல் அடித்து நொறுக்கியதுடன் துப்பாக்கியால் சுட்டும் தாக்கியதாக வழக்கு ஒன்றும் பதிவாகி யிருக்கிறது. இந்த மிரட்டல் வேலையை அமித் ஷாவின் ஆணையின் பேரில்தான் சொராபுதீன் செய்தான் என்பதற்கான சாட்சி யங்கள் உள்ளன.

மோடி அமைச்சரவையில் வருவாய்த் துறை இணை அமைச்சராக இருந்து, பின்னர் மோடியுடன் ஏற்பட்ட மோதல் காரணமாகப் பதவி விலகிய ஹரேன் பாண் டியா, 2003-ஆம் ஆண்டில் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். குஜராத் முசுலீம் படுகொலையை விசாரித்த சிட்டிசன் டிரிபியூனலில் ஹரேன் பாண்டியா சாட்சியம் அளித்த பிறகுதான் இப்படுகொலை நடந்தது. இப்படுகொலையை முசுலீம் தீவிரவாதிகள் நடத்தியதாகப் பழி போட்ட மோடி அரசு, சில முசுலீம் இளைஞர்களைக் கைது செய்தது. ஆனால், இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முசுலீம்கள் குஜராத் உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஹரேன் பாண்டியா கொலையில் சொராபுதீன் கும்பலுக்குத் தொடர்பிருக்கலாம் என்ற வலுவான சந்தேகங்கள் எழுந்த நிலையில்தான், சொராபுதீன் ஷேக் கடந்த 2005-ஆம் ஆண்டு நடை பெற்ற ஒரு போலி மோதலில் அகமதாபாத் நகர போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சொராபுதீன் ஒரு லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி என்றும் அன்றைய குஜராத் முதல்வரான மோடியைக் கொலை செய்யும் திட்டத்துடன் வந்த அவரை போலீசார் மோதலில் சுட்டுக் கொன்றதாகவும் கூறியது குஜராத் போலீசு.

குஜராத் போலீசால் போலி மோதலில் கொல்லப்பட்ட சொராபுதீன் மற்றும் படுகொலை செய்யப்பட்ட சொராபுதீனின் மனைவி கவுசர் பீ.




ஆனால் சொராபுதீனின் சகோதரர் ரூபாபுதின், தனது சகோதரர் தீவிரவாதி என்பதை மறுத்ததுடன், அன்றைய குஜராத் உள்துறை இணை அமைச்சரான அமித் ஷாவின் இரகசிய உத்தரவின் பேரிலேயே சொராபுதீன் படுகொலை செய் யப்பட்டதாகக் குற்றஞ்சுமத்தி உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். மேலும், சொராபுதீனுடன் இருந்த

அவரது மனைவியைக் காணவில்லை என்றும் அவரையும் போலீசார் கொலை செய்திருக்க வேண்டும் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டது, உச்சநீதி மன்றம். அவ்விசாரணை நடந்துகொண்டிருந்த போதே, ''சொராபுதீன் தீவிரவாதி அல்லவென்றும் பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்ட போலீசார் அவரைக் கடத்திச் சென்று கொலை செய்ததாக'' நீதிமன்றத்தில் தெரிவித்தது, குஜராத் போலீசு. சொராபுதீன் படுகொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரது மனைவி கவுசர் பி கொலை செய்யப்பட்டதையும் குஜராத் போலீசே ஒத்துக்கொண்டது.

போலி மோதல் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, சொராபுதீன், அவரது மனைவி மற்றும் சொராபுதீனின் கூட்டாளியான துளசிராம் பிரஜாபதி ஆகியோர் ஆந்திர மாநிலத்தில் ஒரு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, அப்பேருந்தை மறித்த போலீசார் அவர்களை குஜராத்திற்குக் கடத்தி வந்துள்ளனர். அங்கு சொராபுதீனும் அவரது மனைவியும்



படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைகளை நேரில் பார்த்த சாட்சியான பிரஜாபதி மற்றொரு போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த உண்மைகள் அம்பலமாகிவிட்ட நிலையில், ''இது பணம், பதவிக்காக நடந்த கொலை''என்ற குஜராத் போலீசின் வாதத்தை உச்சநீதி மன்றம் ஏற்க மறுத்து, விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றி உத்தரவிட்டது.

சி.பி.ஐ விசாரணையைத் தொடங்கிய பின்னர் உண்மைகள் வெளிவர ஆரம்பித்தன. குஜராத் ஐ.பி.எஸ். அதிகாரிகள் வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன் ஆகியோருடன் அமித் ஷாவும் கைது செய்யப்பட்டார். மூன்று மாதங்கள் கழித்து அமித் ஷா பிணையில் வெளியே வந்துவிட்டாலும், அவர் குஜராத்திற்குச் செல்லக்கூடாது என நீதிமன்றம் தடைவிதித்தது. இதற்கிடையே குஜராத் மாநில அரசு, தங்களது விசாரணையில் தலையிடுவதாகவும், அதிகாரிகளை அச்சுறுத்துவதாகவும் சி.பி.ஐ. முறையிட்டதால் வழக்கு விசாரணை மும்பைக்கு மாற்றப்பட்டது.

ஆனால் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மோடி பிரதமராகப் பதவியேற்ற பிறகு வழக்கை சீர்குலைக்கும் சதி வேலைகள் மேலிருந்து கட்டவிழ்த்துவிடப்பட்டன. ''வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராகாமல் தவிர்த்து வந்த அமித் ஷாவைக் கடுமையாகக் கண்டித்து, அடுத்த அமர்வில் ஆஜராக வேண்டும்'' என உத்தரவிட்ட நீதிபதி உத்பத் அடுத்த நாளே பூனேவிற்குத் தூக்கியடிக்கப்பட்டார். அதன் பிறகு நீதிபதியாக நியமிக்கப்பட்ட பிரிஜ் மோகன் லோயா, தான் தங்கியிருந்த நாக்பூர் அரசு விருந்தினர் மாளிகையில் மர்மமான முறையில் இறந்து போனார். அதற்குப் பிறகு வந்த நீதிபதி கொசாவி ஆரம்பம் முதலே இந்து மதவெறிக் கும்பலின் தலையாட்டி பொம்மையாகச் செயல்படத் தொடங்கினார்.

வழக்கு விசாரணையைத் தொடங்காமல் அதனை நிறுத்திவைத்துவிட்டு, வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக் கோரும் அமித் ஷாவின் மனுவை முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார், அவர். இரண்டே நாட்களில் அம்மனு மீதான விசாரணையை முடித்து, இரண்டு வாரங்களில் தீர்ப்பெழுதி அமித்ஷாவை வழக்கிலிருந்து விடுவித்தும் உத்தரவு பிறப்பித்து விட்டார்.

சி.பி.ஐ. தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தையும் அவர் பொதுபுத்திக்கு எதிரானது என புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிட்டார். சொராபுதீன் கொலை செய்யப்பட்ட அன்று, உள்துறை அமைச்சராக இருந்த அமித்ஷா காவல் துறை உயர் அதிகாரிகளிடம் பேசுவதை விட்டு, கீழ்நிலை அதிகாரிகளாக இருந்த, கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட வன்சாரா, ராஜ்குமார் பாண்டியன் ஆகியோருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பேசியது ஏன் என்று சி.பி.ஐ. எழுப்பிய கேள்விக்கு, தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்துவரும் காலகட்டத்தில், திறமையான அமைச்சர் கீழ்நிலை அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது தவறல்ல என்று அமித் ஷா தரப்பிலிருந்து நீதிபதியே பதிலளிக்கிறார்.

அமித் ஷாவுக்கும் சொராபுதீனுக்கும் தொடர்பிருப்பதை நிரூபிக்கும் தஸ்ரத் பட்டேல் மற்றும் ராமன் பட்டேல் சகோதரர்களின் வாக்குமூலங்களையும் நீதிபதி ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்.

அமித் ஷா, மோடியின் வலது கரம் என்பதற்காக மட்டும் விடுவிக்கப்படவில்லை. அமித் ஷாவின் விடுதலை என்பது மோடி தன்னைத்தானே விடுவித்துக் கொள்வதற்கு ஒப்பானது. 2002-ஆம் ஆண்டில் குஜராத் முதல்வராக மோடி பதவியேற்றதிலிருந்து அம்மாநிலத்தில் நடந்த அனைத்து மோதல் படுகொலைகளிலும் மோடி-அமித் ஷா கூட்டணி சூத்திரதாரியாகச் செயல்பட்டுள்ளது. சொராபுதீன், துளசிராம் பிரஜாபதி, இஷ்ரத் ஜஹான் உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட போலி மோதல் படுகொலைகள் அனைத்தும் மோடியை

முசுலீம் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் அச்சமற்ற தேசியத் தலைவராகக் காட்டும் அரசியல் நோக்கத்தோடு நடத்தப்பட்டவைதான். குஜராத் போலீசு மோடிக்காக ஒரு இளம் பெண்ணை வேவு பார்த்தது கூட அமித் ஷா உத்தரவிட்டு நடந்ததுதான். நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அமித் ஷாவை உ.பி.மாநிலத்தின் தேர்தல் பொறுப்பாளராக மோடி நியமித்தார். அமித்ஷா, தன் பங்குக்கு முசாஃபர் நகர் கலவரத்தைத் திட்டமிட்டு நடத்தி, ஜாட் வாக்குவங்கியை பா.ஜ.க.வை நோக்கித் திருப்பி விட்டார்.

குஜராத் முசுலீம் படுகொலை வழக்கிலிருந்து மோடியை ஏற்கெனவே கழற்றிவிட்டுவிட்டது, பார்ப்பனராகவன் கும்பல். மோடி, தன்னைச்சம்பந்தப்படுத்தும் போலி மோதல் படுகொலை வழக்குகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டுமென்றால், ஒன்று தனது கூட்டாளிகளை அவர் போட்டுத் தள்ள வேண்டும்; அல்லது வழக்கிலிருந்து அவர்களை விடுவிப்பதோடு, வழக்குகளையும் ஊத்தி மூட வேண்டும். கார்ப்பரேட் கும்பலால் பிரதமர் நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டுள்ள மோடி, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டாவது வழியைக் கையில் எடுத்திருக்கிறார். சொராபுதீன் கொலையிலிருந்து அமித் ஷா விடுவிக்கப்பட்டிருப்பதும், மற்ற போலி மோதல் கொலை வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் வன்சாரா, பாண்டே, ராஜ்குமார் பாண்டியன் உள்ளிட்ட போலீசு அதிகாரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அதிகாரமிக்க பதவிகளில் மீண்டும் அமர வைக்கப்பட்டிருப்பதும் இதனை உறுதி செய்கின்றன. தமது அதிகாரம் மற்றும் சுய நலனுக்காக எத்தகைய கிரிமினல் குற்றத்தையும் செய்யத் தயங்காத மோடி-அமித் ஷா-வன்சாரா என்ற கிரிமினல் கும்பலிடம் நாடு சிக்கியிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

• அழகு

### சிறீரங்கம்:

# தமிழகத்தின் அவமானச் சின்னம்

நடந்து முடிந்த சிறீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் குத்தாட்ட ரிக்கார்டு டான்ஸ், சாராயம், பிரியாணி, கறி விருந்து, ரொக்கப்பணம் என்று உழைக்கும் மக்களைச் சீரழிப்பதில் கிரிமினல் ஜெ. கும்பல், புதியதொரு 'புரட்சி'யைச் சாதித்திருக்கிறது. சதியால்தான் தண்டிக்கப்பட்டதாகப் புளுகிய ஜெ. தன்னைத் தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற மாபெரும் 'மக்கள் முதல்வர்' என்று காட்டுவதற்காக நன்கு திட்டமிட்டு, தனது பணபலம், அதிகாரபலத்தைக் கொண்டு மக்களைப் பகிரங்கமாக விலைபேசியும், அரசு அதிகார அமைப்புகளை ஊழல்மயப்படுத்தி சரணடைய வைத்தும், கடந்த முறை அ.தி.மு.க. வென்ற வித்தியாசத்தை விட அதிகமான வாக்குகளைப் பெற்று இந்த வெற்றியை ''வாங்கியுள்ளது.''

தி.மு.க.வை டெபாசிட் இழக்க வைக்க வேண்டும் என்ற வெறியோடு தேர்தல் நடத்தை விதிகளை அப்பட்டமாகவேமீறி, தேர்தல் அதிகாரிகள் முன்னிலையே உழைக்கும் மக்களைப் பணத்தாலும் பரிசுப் பொருட்களாலும் விலைபேசி, இப்படித்தான் செய்வேன், நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்ற ஆணவத்தோடு கொக்கரித்தது, கிரிமினல் ஜெ. கும்பல். ஏற்கெனவே 'குடியரசு' தின அணிவகுப்பில் 'மக்கள் முதல்வர்' படத்தோடு அலங்கார ஊர்வலம் நடத்தி எல்லா அரசு அமைப்புகளும் இக்கிரிமினல் கும்பலின் முன் வாய்பொத்தி சரணடைந்த நிலையில், இப்போது அப்பட்டமாவே ஜெ. கும்பலின் அதிகாரத் திமிரின் முன்னே அடி பணிந்து கிடந்தன.

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் படி பதவியிழக்கும் முதலாவது முதல்வர் என்ற சிறப்புத் தகுதியை அடைந்ததன் விளைவாக இந்த இடைத்தேர்தல் நடந்தது என்றாலும், இந்த தேர்தலை உரிய காலத்தில் நடத்த விடாமல் கிரிமினல் ஜெ. கும்பல் நடத்திய சூழ்ச்சிகளுக்கு தேர்தல் ஆணையமே உடந்தையாக நின்றது. பின்னர், வேறு வழியின்றி இந்த இடைத்தேர்தலை நடத்திய போதிலும், அது ஜெ. கும்பலின் அடியாளாகவே நின்றது. இத்தொகுதியில் கடந்த 2011-இல் இருந்த வாக்காளர்களைவிட தற்போது 9 ஆயிரம் வாக்காளர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி போலி வாக்காளர்களை நீக்கக் கோரியும், ஆர்.டி.ஓ. மனோகரன், தாசில்தார் பஷீர்அகமது மற்றும் பறக்கும்படை அதிகாரிகள் ஆளும் கட்சியின் அடியாட்களாக உள்ளதையும், பணப்பட்டுவாடாக்களையும் விருந்துகளையும் புகைப்பட ஆதாரங்களுடன் தி.மு.க.வினர் கொடுத்து முறையிட்ட போதிலும், கிரிமினல் ஜெ. கும்பலிடம் சரணடைந்துவிட்ட தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. சிறீரங்கம் தொகுதிக்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் உறுதி அளித்திருந்த போதிலும், அதைச் செயல்படுத்தவில்லை.

**ஜெ.கும்பலின் முகத்தில் கரியைப் பூச ஒரு வாய்ப்பு கிடைத்திருந்த போதிலும், எவ்வித அறநெறியுமின்றி பணத்துக்கு விலை போயினர். ரூ.5,000–க்கும் ரூ.2,000–க்கும் விலை பேசப்பட்டு தன்மான உணர்வின்றி தரம் தாழ்ந்து போயினர்.**



பின்னர், தி.மு.க. சார்பில் போட்டியிட்ட ஆனந்த், தேர்தல் அதிகாரிகள் ஆளும் கட்சியின் அடியாட்களாக உள்ளதையும், உரிய திருத்தங்களுடன் வாக்காளர் பட்டியலை வெளியிடக் கோரியும் சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல், நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வானது, ஏன் புதிய பட்டியலை வெளியிடவில்லை என்று கண்டிப்பு காட்டுவதாக நாடகமாடிவிட்டு, புதிய பட்டியலைத் தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்னதாக வழங்குமாறு தேர்தல் ஆணையத்திடம் உபதேசித்துவிட்டு நழுவிக் கொண்டது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் துறை சார்ந்த சிறப்புப் பார்வையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளதால், இத்தேர்தல் சுதந்திரமாகவும் நியாய மாகவும் நடக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்று கூறி, ஜெ.கும்பலின் அராஜக ஆட்டத்துக்குப் பக்கமேளம் வாசித்தது.

பிழைப்புவாத வைகோ, ராமதாஸ், விஜயகாந்து வகையறாக்கள் ஒரு அரசியல்வாதி என்ற முறையில் கூட, கிரிமினல் ஜெ கும்பலை எதிர்த்து தேர்தலில் நிற்கத் துணியவில்லை. தேர்தலில் பங்கேற்காவிட்டாலும், ஒரு ஓட்டுக்கூட விழாவிட்டாலும் இக் கிரிமினல் கும்பலுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யக்கூட முன்வராமல் முடங்கிப் போயினர். ஊடகங்களோ, ஜெயா கும்பலின் கிரிமினல் - பொறுக்கி அரசியலுக்கும் அதன் கொட்டத்துக்கும் உடந்தையாகவே நின்றன. திராவிடக் கட்சிகள் என்றாலே ஊழல்தான் என்று நியாயவான்களைப் போல பேசும் சிறீரங்க பார்ப்பனர்களோ, என்ன இருந்தாலும் நம்மவா என்ற பார்ப்பன பாசத்துடன் இக்கிரிமினல் கும்பலுக்குவெட்க மின்றி ஓட்டுப் போட்டனர்.

பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் 18 ஆண்டுகளாக ஜெ.கும்பலால் இழுத்தடிக்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கில், நீதிபதி டி குன்ஹா நன்கு ஆராய்ந்து எந்த அச்சுறுத்தலுக்கும் அடிபணியாமல் துணிவுடன் இக்கிரிமினல் கும்பலைத் தண்டித்து தீர்ப்பளித்தார். ஆனால் சிறீரங்கம் வாக்காளர்களோ, இத்தேர்தலைப் புறக்கணித்தோ அல்லது இக்கிரிமினல் கும்பலுக்கு எதிராக வாக்களித்தோ ஜெ.கும்பலின் முகத்தில் கரியைப் பூச ஒரு வாய்ப்பு கிடைத்திருந்த போதிலும், எவ்வித அறநெறியுமின்றி பணத்துக்கு விலை போயினர். ரூ.5,000-க்கும் ரூ.2000-க்கும் விலைபேசப்பட்டு, தன்மான உணர்வின்றி தரம் தாழ்ந்து போயினர். ஓட்டுக்குப் பணம் என்பது தேர்தல் வெற்றியையும் தாண்டி, இக்கிரிமினல் கும்பலின் கொள்ளைக்கு வழங்கப்படும் அங்கீகாரமாக மாறி நிற்கிறது. தமிழ்ச் சமுதாயத்தை அடிமைகளாகவும், தன்மானமற்ற இழிபிறவிகளாகவும், கையேந்திகளாகவும் சீரழித்துள்ள ஜெ.கும்பலின் வெற்றியானது, இதுவரையில் இல்லாத மிகவும் ஆபத்தானதொரு எதிர்காலம் தமிழகத்தைச் சூழ்ந்திருப்பதையே எச்சரிக்கையாக நமக்கு உணர்த்துகிறது.

● தனபால்


**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. | வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. | அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்மு கராசு |
| | இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| | முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. | உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| | இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| | முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. | ஆசிரியர் பெயர் | : | இரா. சண்மு கராசு |
| | இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| | முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2015

# அதிரவைக்கும் அதிகார வர்க்க ஊழல்கள்

**தனியார்மயத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டையும் மக்களையும் கொள்ளையடிப்பதில் ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகளை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகார வர்க்கம் விஞ்சி நிற்கிறது.**

அதிகார வர்க்கத்தினர் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளைப் போல இலஞ்ச - ஊழல்களில் ஈடுபடமாட்டார்கள், படித்த வர்க்கத்தினரான இவர்கள் கண்ணியமாக நடப்பார்கள்; அரசியல் தலையீடு இல்லாமல் அதிகார வர்க்கத்தினர் சுயமாக இயங்கினால் ஊழல் என்பதே இருக்காது; ஊழல் முறைகேடு என்றாலே அதற்கு முதன்மைக் காரணம் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள்தான் - என்று தூய்மையான நிர்வாகத்துக்கு ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள்தான் வில்லன்களாக இருப்பதைப் போல துக்ளக், தினமணி போன்ற ஊடகங்கள் தொடர்ந்து சித்தரித்து வருகின்றன.

இம்மோசடித் தனமான கருத்தைப் பொய்யாக்கும் வகையில் அடுத்தடுத்து நடந்துள்ள அதிகார வர்க்கத்தின் ஊழல் - மோசடிகள் பல ஆயிரம் கோடிகளை விஞ்சிவிட்டது. இலஞ்சம் பெறுதல், அரசுக்கு நிதி இழப்பை ஏற்படுத்துதல், வருவாய்க்கு அதிகமாகச் சொத்து சேர்த்தல் முதலான குற்றங்களின் கீழ் நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 157 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி, தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் கடந்த ஆண்டு ஆகஸ்டில் வெளிவந்தது. இவற்றில் 71 வழக்குகளை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. நாடு முழுவதும் பல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது ஊழல், பாலியல் வன்முறை, கொலை உள்ளிட்ட பல வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

உண்மையில், அதிகாரிகள் நடத்தும் ஊழலும் கொள்ளையும்தான் அரசியல்வாதிகளின் ஊழலைவிட மிகப் பெரியதாக இருக்கிறது. இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளைச் செய்வதற்கும் மோசடி அம்பலமானால் அதைத் திட்டமிட்டே மூடி மறைப்பதற்கும் தப்பித்துக் கொள்ளவும் தேவையான தொழில் ரகசியங்களை ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளுக்குக் கற்றுக் கொடுத்துப் பயிற்றுவிப்பதே அதிகாரிகள் கூட்டம்தான். இவர்கள் வாங்கும் இலஞ்சத்தைக் கணக்கிடவும் முடியாது. இலஞ்சம்தான் அதிகார வர்க்கத்தின் இரத்தத்தின் இரத்தமாக இருக்கிறது. ஆதர்ஷ், காமன்வெல்த், அலைக்கற்றை, நிலக்கரி - என எல்லாவிதமான மெகா கொள்ளைகளிலும் அரசியல்வாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் திருடுவதற்கு வழிசொல்லிக் கொடுத்திருப்பவர்கள் அதிகாரிகள்தான். கிரானைட், தாதுமணல், ஆற்றுமணல் - என இயற்கை வளங்களைக் கொள்ளையிடும் எல்லா மாஃபியாக்களிடம் மாதச்சம்பளம் வாங்கிக் கொண்டு திருடுவதற்கும் தப்புவதற்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் ரூட்டு போட்டுக் கொடுக்கிறார்கள்.

உ.பி. அரசுப் பொறியாளர் யாதவ் சிங்: பல நூறு கோடிகளைச் சுருட்டிய கிரிமினல் - ஊழல் பெருச்சாளி.



அண்மையில், உத்தரப் பிரதேசத்தில் அரசுப் பொறியாளர் யாதவ் சிங் வீட்டில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள வைரங்கள், 2 கிலோ தங்கம், கோடிக்கணக்கில் ரொக்கப்பணம் ஆகியனவும், அவருக்கு 20 இடங்களில் அசையாச் சொத்து உள்ளதற்கான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதை ஊடகங்கள் அதிர்ச்சியுடன் செய்தியாக வெளியிட்டன. உத்தரப்பிரதேசத்தில் மாயாவதி ஆட்சிக் காலத்தில் நொய்டா, யமுனா எக்ஸ்பிரஸ் வழி திட்டங்களில் ஏறத்தாழ ரூ. 900 கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ள விவகாரம் மெதுவாகக் கசிந்து, இத்திட்டங்களுக்கான மேம்பாட்டு ஆணையத்தின் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றிய யாதவ் சிங் இப்போது சிக்கிக் கொண்டுள்ளார்.

உ.பி. அரசுப் பொறியாளரின் ஊழல் விவகாரம் அடங்குவதற்குள்ளாகவே, மத்தியப் பிரதேச அரசுத் தேர்வாணையத்தில் தொழில் வல்லுநர்கள், ஆசிரியர்கள் நியமனத்தில் நடந்துள்ள ஊழலில்





ம.பி.யின் ஊழல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான டினு ஜோஷி மற்றும் அவரது கணவர் அரவிந்த் ஜோஷி; அரசுத் தேர்வாணைய ஊழலில் சிக்கி பதவி விலகியுள்ள ம.பி. ஆளுநர் ராம் நரேஷ் யாதவ்.

கோடிக்கணக்கில் சுருட்டியுள்ள அமித் பாண்டே என்ற பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியையும் அவரது கணவரையும் கடந்த ஜனவரியில் ம.பி. சிறப்பு விசாரணைக் குழு கைது செய்துள்ளது. பணி நியமனத்திற்காக இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக முன்னாள் ம.பி. அமைச்சர் லட்சுமிகாந்த் சர்மா, அவரது சிறப்புப் பணிக்கான ஐ.ஏ.எஸ். அதிகாரி சுக்லா, ஆளுநரின் சிறப்புப் பணிக்கான ஐ.ஏ.எஸ். அதிகாரி தன்ராஜ் யாதவ் ஆகியோரும் கைதாகியுள்ளனர். இந்த ஊழல் மோசடியில் ஆளுநர் ராம் நரேஷ் யாதவ்-க்கும் தொடர்பு உள்ளதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதையடுத்து, அவரைப் பதவி விலகுமாறு மைய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதே ம.பி.யில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகப் பணியாற்றிய டினு ஜோஷி மற்றும் அவரது கணவர் அரவிந்த் ஜோஷி ஆகியோரது வீடுகளை 2010-ஆம் ஆண்டில் வருமான வரித்துறையினர் சோதனையிட்டபோது ரொக்கமாக ரூ.3 கோடியும், அந்நிய கரன்சியும், சொத்துக்கள் குறித்த ஆவணங்களும் சிக்கின. அவர்கள் வருமானத்துக்கு அதிகமாக ஏறத்தாழ ரூ.360 கோடிக்கு அளவுக்குச் சொத்துக்களைக் குவித்துள்ளதாக 2014-இல் லோக் ஆயுக்தா போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பலமுறை வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட போதிலும் நீதிமன்றத்துக்கு வராமல் இழுத்தடித்த அவர்கள், அண்மையில் சிறையிடப்பட்டுள்ளனர்.

மும்பையைச் சேர்ந்த ''மிட் டே'' என்ற நாளேடு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கிடைத்த தகவல்களின் மூலம் மகாராஷ்டிராவின் மாவட்ட அளவிலான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஏறத்தாழ ரூ.271.88 கோடி அளவுக்கு ஊழல் செய்துள்ளதாக மார்ச் 2014 -இல் அம்பலப்படுத்தியது. ஏழைகள், பெண்கள், குழந்தைகள், பழங்குடியினர் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை ஒப்பந்ததாரர்கள் விழுங்கி ஏப்பம் விட்ட கதையையும் இதில் உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளதையும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. ஏறத்தாழ 10 மாதங்களுக்குப் பிறகு இப்போது அரசு வெளியிட்டுள்ள ஆரம்பநிலை விசாரணை அறிக்கையில், இந்த மோசடியில் உயர் அதிகாரிகளுக்குத் தொடர்புள்ளதாக ஒப்புக்கொண்டு விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவந்த பாசி நிதி நிறுவனம், முதலீட்டுக்குக் கூடுதல் வட்டி தருவதாகக் கூறி தமிழகம் மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்த 48,000 முதலீட்டாளர்களிடம் ஏறத்தாழ ரூ.1,600 கோடிக்கும் அதிகமான தொகையை மோசடி செய்ததாக கடந்த 2009 -ஆம் ஆண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து தலைமறைவாகிவிட்ட அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மோகன்ராஜ், இயக்குநர்கள் கதிரவன், கமலவள்ளி ஆகியோர் பின்னர் கைது செய்யப்பட்டனர். இதனிடையே கடந்த 2010 ஜனவரியில் இயக்குநர்களில் ஒருவரான கமலவள்ளி திடீரென மாயமானார். விசாரணை நடத்திய அப்போதைய திருப்பூர் மாவட்ட போலீசு சூப்பிரண்டு ஏ.அருண், அப்போதைய ஐ.ஜி. பிரமோத்குமார் உள்ளிட்ட போலீசு அதிகாரிகள் கமலவள்ளியைக் கடத்திச் சென்று ரூ. 2.96 கோடி பணம் பறித்த விவகாரம் அம்பலமானது. ஐ.ஜி. பிரமோத்குமார், அப்போதைய திருப்பூர் டி.எஸ்.பி. ராஜேந்திரன், மத்திய குற்றப் பிரிவு போலீசு நிலைய ஆய்வாளர்களான மோகன்ராஜ், சண்முகய்யா ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர்கள் கைதாகி, அந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் இதுவரை ஏறத்தாழ 80 புகார்தாரர்கள் விசாரிக்கப்பட்டு, 312 ஆவணங்கள் மட்டுமே பார்வையிடப்பட்டுள்ளது. விசாரணையோ நத்தை வேகத்தில் இன்னமும் நகர்ந்து கொண்டிருக்கிறது.

பாசி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான கமலவள்ளியைக் கடத்திச் சென்று ரூ.2.96 கோடி பணம் பறித்த போலீசு ஐ.ஜி. பிரமோத்குமார்.



தமிழக அரசு அதிகாரிகள், ஊழியர்களைத் தேர்வு செய்யும் அரசுப் பணி

யாளர் தேர்வாணையத்தில் (டி.என்.பி.எஸ்.சி.) மிகப் பெரிய ஊழலும் மோசடியும் நடந்த விவகாரம் கடந்த 2011-இல் அம்பலமானது. தேர்வாணையத் தலைவர் செல்லமுத்து மற்றும் 13 உறுப்பினர்கள், குரூப் 1 தேர்வு உள்ளிட்ட பல தேர்வுகளில் - குறிப்பாக உதவி பல் மருத்துவர் பணி, மோட்டார் வாகன ஆய்வாளர் பணி, வி.ஏ.ஓ. பணி நியமனங்களுக்கு லட்சக்கணக்கில் லஞ்சம் வாங்கியுள்ளதாகவும், இதில் பல கோடிகள் சுருட்டப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது. தேர்வாணையத் தலைவரான செல்லமுத்து உள்ளிட்ட 13 உறுப்பினர்களின் வீடுகளில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் விசாரணை நடத்தி பணி நியமன ஆணை, அரசியல் வாதிகளின் சிபாரிசுக் கடிதங்களைக் கைப்பற்றினர். ஒவ்வொரு பணி நியமனத்துக்கும் ஏறத்தாழ ரூ. 5 லட்சம் வரை லஞ்சம் வாங்கியுள்ள விவகாரமும் அம்பலமானது.



டினு ஜோஷி, அரவிந்த் ஜோஷி தம்பதிகளின் ஊழல்-கொள்ளைக்கு எதிராக ம.பி. இளைஞர்கள் அணிதிரண்டு 2011-இல் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப்படம்)

கணக்கில் வராத ரொக்கப் பணமும் நகைகளும் கைப்பற்றப்பட்டு, தேர்வாணையத் தலைவரான செல்லமுத்து பதவி விலகிய பின்னர், தேர்வாணையம் மீண்டும் அக்குறிப்பிட்ட பணிகளுக்கான தேர்வுகளை நடத்த முன் வந்தாலும் தமிழக அரசு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. மேற்கொண்டு விசாரணையைத் தொடர முடியாமல் குற்றவாளிகள் நீதிமன்றத்தில் தடையாணை வாங்கியுள்ளதால், விசாரணை முன்னேறாமல் முடங்கி நிற்கிறது. இதனால் சி.பி.ஐ.யின் விசாரணை தொடருமா, மோசடிகள் வெளிவருமா, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, அவர்கள் சொத்துகள் பறிமுதல் செய்யப்படுமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

தமிழகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அரசுத்துறை நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் மீது ஊழல் குற்றத்துக்காக யாரேனும் வழக்கு தொடர வேண்டுமானால், அதற்கு அரசின் முன் அனுமதி தேவை என்று சட்ட விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் மீது ஊழல் வழக்குத் தொடர அனுமதி அளிக்கும் அதிகாரம் மாநில முதல்வர் உள்ளிட்ட மூவர் கொண்ட குழுவிடம் இருப்பதால், நேர்மையான அதிகாரிகளை மிரட்டுவதற்கும் ஊழல் அதிகாரிகளைத் தப்ப வைப்பதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது என்று ஐ.ஏ.எஸ். அதிகாரியான உமாசங்கர் ஏற்கெனவே அம்பலப்படுத்தியுள்ளார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் கூடுதல் இயக்குநராக அவர் பணியாற்றிய காலத்தில் நடந்த பல ஊழல் விவகாரங்களில், அதிகாரிகள் மீது வழக்கு தொடர முடியாததற்கு இக்குழுவின் அனுமதி கிடைக்காதது தான் காரணம் என்று போட்டுடைத்துள்ளார்.

அரசியல்வாதிகள் செய்யும் ஊழல்கள் வெளிச்சத்துக்கு வரும்போது, எதிர்க்கட்சிகளாலும் ஊடகங்களாலும் அம்பலப்படுத்தப்படுகின்றன. ஆனால் அதிகார வர்க்கம் செய்யும் ஊழல்களும் மோசடிகளும் வெளியே தெரிவதில்லை. ஊழல் அதிகாரிகள் தமக்கு உரிய பங்கு கிடைக்காத ஆத்திரத்தில் போட்டுக்கொடுக்கும் போதுதான் அதிகார வர்க்கத்தினரின் ஊழல்-கொள்ளைகள் மெதுவாகக் கசிகின்றன. இருப்பினும், அதையும் முடக்கவும் மூடிமறைக்கும் தகிடுதத்தங்களில் இறங்குவதும், துறை சார்ந்த விசாரணை நடப்பதாக பூசி மெழுகுவதும், விசாரணையை இழுத்தடிப்பதும்தான் நடக்கிறது.

அரசு எனும் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள் இந்த அதிகாரிகள்தான். அரசு எனும் ஆயிரங்கால் பூதத்தின் கண்ணும் காதும் மூக்கும் மூளையுமாக இருப்பது அதிகார வர்க்கம்தான். ஆட்சி நடத்துவதே அவர்கள்தான். அதனால்தான் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் என்று குறிப்பிடப்படுகின்றனர். இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள் மட்டுமின்றி, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரம், அரசின் வரவு-செலவுகள், கொள்கைகள் - திட்டங்களை ஏகாதிபத்தியங்களுக்கும் கார்ப்பரேட் முதலாளிகளின் சுரண்டல், ஆதிக்கம், கொள்ளைக்கு ஏற்ற வகையில் வகுத்து, அவற்றைச் செயல்படுத்துபவர்கள்தான் இந்த அதிகாரிகள் கூட்டம். ஆளும் கும்பலுக்குச் சேவை செய்யும் இத்தகைய ஊழல்-மோசடி அதிகார வர்க்கத்தைக் கொண்டுள்ள அரசுக் கட்டமைவில், லோக்ஆயுக்தா போன்ற ஊழல் தடுப்பு ஏற்பாடுகளும் சட்டங்களும் போட்டாலும் அவையனைத்தும் அடுத்தடுத்து தோல்வியைத்தான் தழுவுகின்றன.

இந்நிலையில், சட்டபூர்வ கிரிமினல் கும்பலாக வளர்ந்துவிட்ட இத்தகைய ஊழல் அதிகார வர்க்கத்தை தனிநபர்களின் போராட்டங்களால் ஒழித்துவிடவோ, கடுமையான சட்டங்களால் திருத்தியமைத்துவிடவோ ஒருக்காலும் சாத்தியமில்லை. இத்தகைய அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறைகளின் அதிகாரத்தைப் பறிக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கமிட்டிகளின் அதிகாரத்தின் கீழ் அவர்களைக் கொண்டுவரவும் புரட்சிகர அமைப்பும் போர்க்குணமிக்க போராட்டங்களும் அவசியமாக உள்ளன என்பதையே அனுபவங்கள் காட்டுகின்றன.

● குமார்

போபால் முதல் இராணிப்பேட்டை வரை

# முதலாளி வர்க்கத்தின் ஆதாயக் கொலைகள்!

**வளர்ச்சி, வேலைவாய்ப்பு, அந்நியச் செலாவணி என்ற மோசடியான சொல்லடுக்குகள், தொழிலாளி வர்க்கம் கொல்லப்படுவதையும், முடமாக்கப்படுவதையும் குற்றச் செயலாகக் கருதுவதை நிராகரிக்கின்றன.**

சென்னையிலிருந்து பெங்களூரு செல்லும் நெடுஞ்சாலையில், பாலாறும் பொன்னை ஆறும் பாய்ந்து நீரூட்டும் கிராமங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கிறது இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பேட்டை. அங்கு, தை மாத அதிகாலைகளில் நமது உடலைத் தழுவி நுரையீரலை நிறைக்கும் குளிர் காற்றில் சாவின் வாடை விடாப்பிடியாக வீசுகிறது. அந்த வாடை கொல்லப்பட்ட 10 தொழிலாளர்களின் கொலைக்கு மட்டுமின்றி, அந்தப் பகுதியே சிறுகச் சிறுகக் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதன் சாட்சியமாக உள்ளது.

ஜனவரி 30 நள்ளிரவில் இராணிப்பேட்டை ஆர்.கே. லெதர்ஸ் ஆலையை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த சிப்காட் பொதுச் சுத்திகரிப்பு நிலையத்தின் தொட்டி உடைந்து, ஆயிரம் டன்னுக்கும் அதிகமான சகதி சுனாமியாக சாடி வெளியானது. ஒரு ஆள் உயரத்துக்கு பாய்ந்து வந்த அந்தச் சகதி ஆர்.கே. லெதர்ஸ் ஆலையினுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரவு பாதுகாவலரை மூழ்கடித்து, தூங்கிக் கொண்டிருந்த வட மாநிலத் தொழிலாளர்களில் 9 பேரை பலி வாங்கியது. என்ன நடந்தது என்று அறிந்து கொள்ளும் முன்னரே, சகதியின் அழுத்தத்தால் மூச்சுத் திணறி, இரசாயனத்தின் அரிப்பால் அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

தோலின் கழிவுகள், அதிலிருந்து ஊறி வெளியாகும் குரோமிய உப்புகள், உலோக ஹைட்ராக்சைடுகள், கரிமக் கழிவுகள், சாயப் பொருட்களின் கசடுகள் போன்றவற்றால் நிரம்பியிருந்தது, அந்தச் சகதி. ஓட முனைந்திருந்தாலும் முடியாதபடி ஹைட்ரஜன் சல்ஃபைடு என்ற விஷ வாயு அவர்களது மூச்சை நிறுத்தியிருக்கும். போபால் முதல் ராணிப்பேட்டை வரை எல்லா இடங்களிலும் மனித உயிர்களைக் காவு கொள்வது, ரசாயனக் கழிவு என்பதை விட, முதலாளிகளின் இலாப வெறி என்று கூறுவதே பொருத்தமானது.

எந்த குரோமியம் உப்பாலும் பதப்படுத்த முடியாத ஒரு தோல் உண்டென்றால், அது இந்த முதலாளி வர்க்கத்தின் தோல்தான். இந்தப் படுகொலை நடந்த அன்று மாலையே, சென்னை வர்த்தக மையத்தின் குளுகுளு அரங்குகளில் பன்னாட்டு தோல் கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. தமது வெளிநாட்டு வாடிக்கையாளர்களுடன் தோல் ஆலை முதலாளிகள் வர்த்தக பேரங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். அநியாயமாக 10 உயிர்கள் கொல்லப்பட்ட அதிர்ச்சியோ, வருத்தமோ கடுகளவும் அவர்களிடம் தென்படவில்லை.

பத்து தொழிலாளர்கள் மரணம் குறித்து தமிழக அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது போலக் காட்டும் பொருட்டு, வழக்கு சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கும் பொறுப்பிலிருந்த 3 இயக்குனர்கள் கைது செய்யப்பட்டனர்; இந்த சாவுக்கு நேரடிப் பொறுப்பேற்க வேண்டிய இலஞ்சப் பேய்களான மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகாரிகளில் 3 பேர் மட்டும் கணக்கு காட்டுவதற்காகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். ஃபாக்டரி இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட மற்ற அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. யாரும் குற்ற வழக்கில் கைது செய்யப்படவில்லை.

பல்வேறு நச்சு இரசாயனப் பொருட்கள் நிரம்பியுள்ள கழிவில் நடப்பதற்கே திணறும் மீட்புக் குழுவினர்.



இந்த மரணத்துக்கு நேரடி பொறுப்பேற்க வேண்டிய ஆர்.கே. லெதர்ஸ் நிறுவன முதலாளி கைது செய்யப்படவில்லை; அவர் மீது வழக்குகூடப் பதிவு செய்யப்படவில்லை. சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்ட 86 ஆலைகளுக்கு மின்னிணைப்பு தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. பத்து உயிர்கள் மடிந்து, பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியான பிறகும், இது குறித்து அரசும், முதலாளிகளும் இவ்வளவு அலட்சியம் காட்டுகிறார்களென்றால், உயிரோடு இருக்கும் தொழிலாளர்களை இவர்கள் எப்படி நடத்துவார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

**வடமாநிலத் தொழிலாளர்களின் வாழ்க்கை**

இராணிப்பேட்டையில் ரூ 1,500 - மாத வாடகையில் ஒரு அறையைப் பிடித்து அதில் 4 பேரைத் தங்க வைக்க முடியும். ஒருவருக்கு ஒரு நாளைக்கான செலவு ரூ 15-க்கும் குறைவுதான்.

கொல்லப்பட்ட வடமாநிலத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருந்த ஆர்.கே. லெதர்ஸ் முதலாளி இந்தப் பணத்தைக் கூட செலவு செய்யத் தயாரில்லை. அதனால்தான் அந்த தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குள்ளாகவே தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். 10 - அடிக்கு 10 - அடியை விடக் குறைவான அளவில் அங்கே 4 அறைகள், அதில் ஒன்றில் ''EB அறை'' என்று எழுதப்பட்டு மின் கருவி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறைகளுக்குள்தான் கொல்லப்பட்ட 10 பேரும் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அறை வாடகை கொடுக்கத் தயாராக இல்லாத முதலாளிகள், அவர்கள் வேலை செய்கிறார்களா என்று கண்காணிப்பதற்கு மட்டும் பெரும் செலவில் ஆலை முழுவதும் காமெராக்களை ஆங்காங்கே பொருத்தியிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் அறையிலிருந்து சில அடிகளில் இருக்கிறது ஆலை. உள்ளே இரசாயன பதப்படுத்தலுக்கான உருளைகளை இயக்கும் வேலை, அவர்களுடையது. வேலை நேரத்துக்குப் பிறகு அங்கேயே தூங்க வேண்டியிருப்பதால், அம்மோனியா, ஃபார்மிக் அமிலம், சாயங்கள், உப்புகள் மற்றும் பதப்படுத்தப்படும் தோலின் நாற்றம் 24 மணி நேரமும் அவர்களைச் சூழ்ந்திருக்கிறது.

2 உருளைகளை இயக்கும் ஒரு நாள் வேலைக்கு மாதச்சம்பளம் ரூ 5,000. கூடுதலாக ஒரு உருளை, கூடுதலாக 4 மணி நேரம் என 16 மணி நேரம் உழைத்து மாதம் ரூ. 10,000 வரை அவர்கள் சம்பாதிக்கிறார்கள். அதில் ரூ. 9,000-ஐ மேற்கு வங்கத்தில் காத்திருக்கும் குடும்பத்தினருக்கு அனுப்பி விட்டு எஞ்சிய தொகையில் அரிசி வாங்கி, கோதுமை மாவு வாங்கி, பருப்பு வாங்கி சமைத்துச்சாப்பிட்டுக் கொள்கிறார்கள்.

இரசாயனக் கழிவுகளால் நீரும், நிலமும், உடலும், வாழ்வும் அரிக்கப்பட்ட உள்ளூர் தொழிலாளர்கள், ஆலைகளில் உருளைகளை இயக்கும் வேலையைச் செய்ய மறுக்கவே தான், வடஇந்தியத் தொழிலாளர்களை வரவழைத்து அவர்களுக்கு 'வேலை வாய்ப்பை' வழங்கியிருக்கிறார்கள் ராணிப்பேட்டை முதலாளிகள். மனிதர்கள் அழிந்தாலும், மண் அவிந்தாலும் அவர்களுக்கு வேண்டியது லாபம். மேலும் லாபம்!

சங்கம், 8 மணி நேர வேலை, வார விடுமுறை, சேம நலம், மருத்துவ வசதி, பாதுகாப்புக் கருவிகள் போன்ற எதுவும் கிடையாது. இருந்தும் எந்த விதத் தொல்லையும் இல்லாமல் முதலாளிகளைப் பாதுகாத்து வருகிறது தொழிலாளர் நலத்துறை.

**இலாபம் முதலாளிக்கு,**
**கழிவு அரசாங்கத்துக்கு!**

இராணிப்பேட்டையில் தோல் பதனிடும் ஆலைகளின் இரசாயனம் கலந்த கழிவு நீர் நிலத்தையும், நீரையும் கேட்பாரின்றி நஞ்சாக்கி வந்தன. இவற்றுக்கெதிரான பல போராட்டங்களுக்குப் பிறகு, 1990-களில் சிப்காட்டில் உள்ள 80-க்கும் மேற்பட்ட ஆலைகள் உமிழும் கழிவுகளைச் சுத்தம் செய்ய ரூ 2.6 கோடி செலவில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

தோலைப் பதப்படுத்தி விற்று இலாபம் பார்ப்பவர்கள் முதலாளிகள். 'மாசு படுத்துபவர்தான் காசு கொடுக்க வேண்டும்' என்று உச்ச நீதிமன்ற தீர்ப்பெல்லாம் இருக்கிறது. ஆனால், வேலூர் முதல் திருப்பூர் வரை எந்த இடத்திலும் முதலாளிகள் கழிவுநீரைச் சுத்திகரிப்பதில்லை. அப்படியே ஆற்றில் விடுகிறார்கள். சுத்திகரிக்க காசில்லை என்கிறார்கள். உடனே அரசு பணம் தருகிறது. ராணிப்பேட்டை சுத்திகரிப்பு நிலையத்துக்கான செலவில் 50% அரசு மானியம், 25% வங்கிக் கடன்; 25% மட்டுமே தோல் ஆலை முதலாளிகளின் காசு.

தோல் ஆலை முதலாளிகளின் ஆதாயத்திற்காகக் கொல்லப்பட்ட வடமாநிலத் தொழிலாளர்களின் சடலங்கள்.



இப்படி மக்கள் வரிப் பணத்தில் சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்டியது மட்டுமின்றி, அதனை இயக்கும் பொறுப்பை, மக்கள் பணத்தில் மஞ்சள் குளிக்கும் இந்தத் தனியார் முதலாளிகளின் கூட்டமைப்பான ராணிப்பேட்டை சிட்கோ கழிவு நீர் சுத்திகரிப்பு நிறுவனத்திடமே ஒப்படைத்திருக்கிறது அரசு. அயோக்கியத்தனம் இதோடு முடியவில்லை.

ஒவ்வொரு ஆலை முதலாளியும் சுத்திகரிப்பு நிலையத்துக்கு தான் அனுப்பும் கழிவு நீரின் அளவுக்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும். 1000 கிலோ தோலை பதப்படுத்திய கழிவு நீரை அனுப்புவதற்கு உரிமத்தை வாங்கி வைத்திருக்கும் ஒரு ஆலை முதலாளி, 5000 கிலோ தோலை பதப்படுத்தி 5 மடங்கு கழிவு நீரை அனுப்புவார்.



பாலாற்றில் கொட்டப்படும் தோல் ஆலைக் கழிவு நீர். (கோப்புப் படம்)

சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்வாகத்தைக் கவனிக்கும் இயக்குநர்களான முதலாளிகளோ, கழிவு நீர் அளவைமானிகளைச் செயலற்றதாக்கி வைத்து, எல்லாம் சரியாக நடப்பதாகப் பொய்க்கணக்கு காட்டுவார்கள். இதை நேரில் வந்து கண்காணிக்க வேண்டிய மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளோ தங்களுக்கு வரவேண்டிய லஞ்சப்பணத்தைத் தவிர வேறு எதையும் கண்டுகொள்வதில்லை.

**அன்று நடந்த படுகொலையின் பின்புலம்**

பத்து உயிர்களைக் காவு வாங்கிய அந்த தொட்டி உடைந்தது ஏன்? சுத்திகரிப்பு நிலையத்தில் ஆலைகளிலிருந்து வந்து சேரும் கழிவுநீரை 20 மணி நேரம் வரை சேமித்து ஒரு படித்தானதாக மாற்றும் தொட்டியானது சமன் செய்யும் தொட்டி (equalization tank) என்று அழைக்கப்படுகிறது. அந்தத் தொட்டியில் எந்திரங்களால் இயக்கப்படும் கலக்கிகள் மூலம் கழிவுகள் கீழே படிந்து விடாமல் தடுப்பதும், சல்ஃபைடுகள் ஆக்சிஜன் ஏற்றம் செய்வதும் நடக்க வேண்டும்.

சிப்காட் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீரை விதிப்படி கையாளாமல், சமப்படுத்தல் தொட்டியிலிருந்து எடுத்த இரசாயன சகதியை தேக்கி வைப்பதற்கு, முறையான அனுமதிகள் இன்றி சட்டவிரோதமாக ஒரு தொட்டியைக் கட்டியிருக்கின்றனர் அதை நிர்வகித்த முதலாளிகள்.

அந்தத் தொட்டியில் நிரப்பப்பட்டிருந்த இரசாயனக் கழிவு சகதியின் அழுத்தம் தாங்காமல்தான் பக்கச் சுவர் உடைந்து பல நூறு டன் அளவிலான இரசாயனக் கழிவு சுனாமியாக வெளியேறி தூங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்களின் உயிரைப் பறித்திருக்கிறது.

தோல் கழிவுகளை தேக்கி வைக்கும் அல்லது சுத்திகரிக்கும் பகுதிகளில் உருவாகும் ஹைட்ரஜன் சல்ஃபைடு வாயு, தேய்த்து வைத்த பித்தளைக் குடத்தை சில மணி நேரத்தில் பச்சையாக்கி விடும்; புதிதாக வாங்கி மாட்டும் வெள்ளிக் கொலுசை ஓரிரு நாட்களில் கருப்பாக்கிவிடும்; சிப்காட் பகுதி மண்ணில் இருக்கும் குரோமியத்தின் அளவு, தொழிற்சாலைக் கழிவில் அனுமதிக்கப்பட்ட அளவை விட 2 மடங்குக்கும் அதிகமாக உள்ளது. அப்படியானால் இது, இந்த வட்டாரத்தில் வசிக்கும் மக்களின் உடலில் எத்தனை வகையான நோய்களை தோற்றுவிக்கும் என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாம்.

தமிழகத்தின் நீரையும், நிலத்தையும் நஞ்சாக்கி, தொழிலாளர்களைச் செல்லரித்து உற்பத்தி செய்யப்படும் பதனப்படுத்தப்பட்ட தோல்கள் பயன்படுவது யாருக்கு?



இரசாயனக் கழிவுகள் தோற்றுவிக்கும் இந்த அழிவுகளைப் பற்றியெல்லாம் நம்மைக் காட்டிலும் தோல் ஆலை முதலாளிகளுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தே தான் இந்த நச்சுக் கழிவுகளை அவர்கள் சுத்திகரிக்காமல் வெளியேற்றுகிறார்கள். சுத்திகரிப்பதற்கு ஆகும் செலவைத் தவிர்த்

தால் கூடுதல் இலாபம் என்ற ஒரு காரணத்தைதவிர இதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை.

போபால் முதல் இராணிப் பேட்டை வரையில் எங்கே இது போன்ற மரணங்கள் நேர்ந்தாலும், அவற்றை முதலில் ''விபத்து'' என்று சொல்லி மடையடைக்கப் பார்க்கிறார்கள். இராணிப்பேட்டையில் நடந்துள்ள முறைகேட்டைப் போல மறைக்க முடியாத குற்றமாக இருக்கும் பட்சத்தில், குற்றமுறு அலட்சியம் என்ற குற்றப்பிரிவில் வழக்கு பதிவு செய்கிறார்கள். குடந்தை பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் கொல்லப்பட்ட நிகழ்வைப் போன்ற சாவுகளாக இருந்தால், கொலைக்குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் என்று போலீசு வழக்கு பதிவு செய்கிறது.

ஆனால் உண்மை என்ன? கிரிமினல் சட்ட மொழியில் சொல்வதென்றால் இவை அனைத்தும் ஆதாயத்துக்காக செய்யப்படும் கொலைகள்.

### என்ன ஆதாயம்? யாருக்கு ஆதாயம்?

யாருடைய ஆதாயத்துக்காக? தோல் தொழிற்சாலை முதலாளிகளின் ஆதாயத்துக்காக! லஞ்சப் பேய்களான அதிகாரிகள், ஓட்டுப் பொறுக்கிகளின் ஆதாயத்துக்காக! இவர்கள் மட்டுமல்ல; இவர்களைவிட முக்கியமாக, இந்த தோல் பொருள் விற்பனையில் கொள்ளை இலாபமீட்டும் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதாயத்துக்காக!

ஆம். மண்ணையும், நீரையும் நஞ்சாக்கி, விவசாயிகளின் வாழ்வாதாரங்களை அழித்து, தொழிலாளர்களை கொத்தடிமைகளாகச் சுரண்டி நடத்தப்படும் இந்தத் தோல் துறையின் உற்பத்தி நம் நாட்டுக்கானது அல்ல. மேற்கத்திய மேட்டுக்குடியினர் பயன்படுத்தும் செருப்புகளையும், மேல் அங்கிகளையும், அலங்காரப் பொருட்களையும் தயாரிப்பதற்காகத்தான் தோல் ஏற்றுமதி நடக்கிறது. இதன் மூலம் கிளார்க்ஸ், ஹூகோ பாஸ், ஹஷ் பப்பீஸ், மார்க்ஸ் - ஸ்பென்சர், ரீபோக், டாமி ஹில்ஃபிகர், கோச், கெஸ் உள்ளிட்ட பன்னாட்டு வணிக முத்திரை நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்டுகின்றன. அவர்களுக்குப் பதப்படுத்தப்பட்ட தோலை ஏற்றுமதி செய்யும் உள்நாட்டு முதலாளிகளும் லாபமடைகின்றனர்.

''தோல் துறையின் மூலம் நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணி கிடைக்கிறது'' என்றும், ''ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது'' என்றும், இலாப வேட்டைக்கான இந்த நடவடிக்கைகளை புனிதப்படுத்தி எந்திரங்கள், இரசாயனங்கள் இறக்குமதி செய்து கொள்ள வரிச்சலுகை, வருமான வரிச்சலுகை, தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு மானியங்கள் என்று மக்களின் வரிப்பணத்தால் முதலாளிகளைக் குளிப்பாட்டுகிறது, அரசு.

தோல் தொழிற்சாலைகள் அளிக்கும் வேலைவாய்ப்பு என்பது, கழிவு நீரால் பாலாற்றையும் குடிநீரையும் பாசன நீரையும் விளைநிலத்தையும் காற்றையும் நஞ்சாக்கி, விவசாயத்தை அழித்து, இலட்சக்கணக்கான விவசாயிளை வேலையற்றவர்களாக்கிவிட்டு, சில ஆயிரம் பேருக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்பு. அதுவும், இரசாயனக் கழிவுகளால் அரித்துத் தின்னப்படுவதற்கு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பு. ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி என்பது முதலாளிகள் ஈட்டும் கொள்ளை இலாபம்.

பன்னாட்டு, இந்நாட்டு முதலாளிகளின் இலாபவேட்டைக்கு நமது மண்ணையும் மக்களையும் இப்படி இரையாக்குவதைத் தீவிரப்படுத்துவதற்குத்தான் ''மேக் இன் இந்தியா'' என்று கூவுகிறார் மோடி. இராணிப்பேட்டை போல இன்னும் எத்தனை சாவுகளை இந்தியா உருவாக்க வேண்டும்?

● அப்துல்

## வேலூர் மாவட்டத் தோல் ஆலைகள் - வரலாறு.

20-ம் நூற்றாண்டின் முதல் பாதியில் காலனிய ஆட்சியாளர்களின் தேவைக்காக கன்றுக்குட்டி தோலை சுண்ணாம்பிலும், மரச் சாறுகளிலும் பதப்படுத்தி அனுப்பும் வியாபாரத்தை வட ஆற்காடு மாவட்டத்தின் இசுலாமிய வியாபாரிகள் செய்து வந்தனர். அதில் வெளியான மக்கும் தன்மையுடைய விலங்கு மற்றும் தாவரக் கழிவுகளை இயற்கை செரித்துக் கொண்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இலாப வீதத்தை பல மடங்கு பெருக்க குரோமியம் உப்புகள், இரசாயன உப்புகள் மற்றும் பிற வேதிப் பொருட்களைப் பயன்படுத்தித் துரிதமாகத் தோல் பதனிட்டு, உலகளாவிய அளவில் சந்தைப்படுத்தும் வணிகம் வளர ஆரம்பித்தது. ஐரோப்பிய நாடுகளில் நீரையும், நிலத்தையும் பாழாக்கும் இரசாயன கழிவுகளுக்கு எதிர்ப்பு வலுக்கவே, இந்தத் தொழில் இந்தியா போன்ற நாடுகளின் தலையில் கட்டப்பட்டது.

''இந்தியாவிலிருந்து பச்சைத் தோல் மற்றும் அரை பதப்படுத்தப்பட்ட தோல்களின் ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும். முழுமையாக செம்மைப்படுத்தப்பட்ட நிலையில்தான் தோலை ஏற்றுமதி செய்ய வேண்டும். அப்போதுதான் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கும், நாட்டுக்குத் தேவையான அன்னிய செலாவணி கிடைக்கும்'' என்று இந்திய அரசு 1972-ம் ஆண்டு முடிவு செய்தது.

அதை ஒட்டி 1970-களில் ராணிப்பேட்டையில் இப்போதைய சிப்காட் வளாகம் ஆரம்பிக்கப்பட்டது. குரோமிய உப்பு கொண்டு தோல்களை செம்மைப்படுத்தும் ஆலைகளும் செயல்பட ஆரம்பித்தன. பேரழிவு தொடங்கியது.

# சுண்டைக்காய் கால்பணம்! சுமைகூலி முக்கால் பணம்!!

> தனது தேவையில் வெறும் 3.22 சதவீத மின்சாரத்தை, 4,940 கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்து தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குகிறது, தமிழக மின்வாரியம். இது, அதனின் ஆண்டு வருமானத்தில் 15 சதவீதமாகும்.

**த**மிழ்நாடு மின்சார வாரியத்தின் நட்டம் கடந்த 2013-14 ஆம் நிதி ஆண்டில் ரூ.13,985.03 கோடியாக அதிகரித்திருக்கிறது. இதற்கு முந்தைய நிதி ஆண்டோடு ஒப்பிடுகையில் நட்டம் ரூ.2305 கோடி அதிகமாகும். மேலும், மின்வாரியத்தின் மொத்தக் கடன் ரூ.74,113.11 கோடியாகவும் அதிகரித்து, இது மாநிலத்தின் மொத்தக் கடன் சுமையில் சரி பாதியாக உள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் ஏறத்தாழ ரூ.16,000 கோடி அளவிற்கு இரண்டு முறை மின்கட்டணங்கள் உயர்த்தப்பட்ட போதிலும், மின்வாரியத்தின் நட்டம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறதென்றால், மக்களிடமிருந்து கட்டணமாகக் கொள்ளையடிக்கப்பட்ட பணம் எங்குதான் கொட்டப்படுகிறது? மின்வாரியம் சந்தித்து வரும் நட்டத்திற்கு உண்மையான காரணம் என்ன?

குறிப்பிட்ட சில தனியார் மின்உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து கொள்ளை விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்படுவதுதான் மின்வாரியம் சந்தித்திருக்கும் நட்டத்திற்கான பிரதான காரணம் என்றும், மின்வாரியம் இதற்கு உரிய விளக்கமளிக்க வேண்டுமென்றும் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற கருத்துக்கேட்புக்கூட்டங்களில் பங்கேற்று கேள்வி எழுப்பினர் ம.க.இ.க., பு.மா. இ.மு., மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த தோழர்கள்.

‘‘கருத்துக்கேட்புக் கூட்டங்களில் மக்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு நாம் பதில் சொல்லாமலேயே, மின் கட்டணத்தை உயர்த்துவது சரியான அணுகுமுறையல்ல’’ என்று கட்டணத்தை உயர்த்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமது கருத்தை அறிக்கையாகவும் சமர்ப்பித்திருந்தார், மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர்களுள் ஒருவரான நாகல்சாமி.

கருத்துக் கேட்புக் கூட்டங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் இதுவரை விடையில்லை. நாகல்சாமி எழுப்பிய கேள்விக்கும் பதிலில்லை.

‘‘இன்று மொத்த மின் தேவையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மின்சாரத்தை தனியாரிடமிருந்து, அதிக விலை கொடுத்துக் கொள்முதல் செய்வதுதான் மின்வாரியம் சந்தித்து வரும் நட்டத்திற்கான காரணம்’’ என்கிறார், பொறியாளர் காந்தி.

மேலும், ‘‘ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்துவரும் உற்பத்தி நிலையங்களில் பராமரிப்பில் குறைபாடு, இயந்திரப் பழுது உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் அதன் முழு உற்பத்தித் திறனில் பகுதியளவு உற்பத்தி முடங்கியுள்ளது. இவற்றைச் சரி செய்து, புதிய மின்உற்பத்தி நிலையங்களை அரசே தன் சொந்த பொறுப்பில் தொடங்கும் பட்சத்தில், தனியாரிடம் கொள்முதல் செய்ய வேண்டிய தேவை எழாது. நட்டத்தையும் சந்திக்கத் தேவையில்லை’’ என்கிறார் அவர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், ‘‘2007 முதல் 2012 வரையிலான 11-ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 7,808 மெகாவாட் திறன்கொண்ட புதிய மின் நிலையங்களை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டிருந்த நிலையில், ஒரு மெகாவாட் அளவுக்குக்கூட

அநியாய மின்கட்டண உயர்வைக் கண்டித்து தனது தொழிலகத்தில் கருப்புக் கொடியை ஏற்றும் சிறுவீத உற்பத்தியாளர்.



புதிய மின்நிலையங்கள் அமைக்கப்படவில்லை'' என்று தமிழக அரசை கண்டிக்கிறது, இந்திய தலைமை கணக்குத் தணிக்கை யாளரின் அறிக்கை.

''மின் உற்பத்தியில் தனியாரை ஊக்குவிக்க வேண்டும்; மின் வாரியத்தைப் படிப்படியாகத் தனியார்மயமாக்க வேண்டும்'' என்பது அரசின் கொள்கை முடிவாகவே இருக்கிறது. இதன் பொருட்டு, பற்றாக்குறையை தொடர்ந்து பராமரிக்கவே விரும்பு கிறது அரசு. இதற்குத் தோதாக, அரசின் மின்திட்டங்கள் திட்ட மிட்டே முடக்கப்படுகின்றன என்பதுதான் முகத்திலறையும் உண்மை.

தற்பொழுது, பொதுத்துறை நிறுவனங்களிடம் யூனிட் 3 ரூபாய்க்கு மின்சாரம் கிடைக்கும் நிலையில், எஸ்.டி.சி.எம்.எஸ். எலெக்ட்ரிக் நிறுவனம், அபான் பவன் நிறுவனம், பென்னா எலெக்ட்ரிக்சிட்டி ஆகிய தனியார் நிறுவனங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.5 என்ற விலையில் கொள்முதல் செய்கிறது. ஜி.எம்.ஆர்.பவர்கார்ப்பரேஷன், சாமல்பட்டி பவர்கார்ப்பரேஷன், பிள்ளை பெருமாள் நல்லூர் பவர் கார்ப்பரேஷன், மதுரை பவர் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.14 வரையில் மின்சாரம் வாங்கப்படுகிறது.

இந்த நான்கு நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மின்சாரம், மொத்த மின்சாரத் தேவையில் வெறும் 3.22 சதவீதம்தான். ஆனால், வெறும் 3 சத மின்சாரத்தை பெறுவதற்கு, தனது ஆண்டு வருமானத்தில் 15 சதவீதமான ரூ.4,940 கோடி ரூபாயை கொட்டு கிறது அரசு. இது, முற்றிலும் அறிவுக்குப் பொருந்தாத ஒன்று. ஆனாலும், மின்வாரியம் தொடர்ந்து இதை செய்து வருகிறது.

மேலும், ஜி.எம்.ஆர். நிறுவனத்துடனான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கக் கூடாதென்று, நாகல்சாமி எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், அவரது எதிர்ப்பை மீறி, யூனிட் ஒன்றுக்கு ரூ.12.19 பைசா வீதம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு மின்சாரம் வாங்க தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் எஞ்சிய இரு உறுப் பினர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். இத்தகைய நடவடிக்கை கள், இவர்களின் நோக்கத்தை சந்தேகிக்கத்தக்க வகையில்தான் அமைந்துள்ளன.

இவற்றுக்கெல்லாம், ''மின்வெட்டைத் தவிர்த்து, மின்பற்றாக் குறையைச் சமாளிக்கும் பொருட்டே தனியார் நிறுவனங்களிட மிருந்து கூடுதல் விலைகொடுத்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய வேண்டிய இக்கட்டில் தள்ளப்பட்டிருப்பதாக'' ஒற்றை வரியில் வாயடைக்க எத்தணிக்கிறது, தமிழக அரசு.

தமிழக அரசு வழங்கும் விலை மலிவான மின்சாரத்தில் மினுக்கும் சென்னையில் உள்ள நவீன மால் ''எக்ஸ்பிரஸ் அவென்யு''.




2003-04 நிதியாண்டில் 39,240 மில்லியன் யூனிட்டுகளாக இருந்த தமிழகத்தின் மொத்த மின்சாரத் தேவை தற்பொழுது 91,642 மில்லியன் யூனிட்டாக அதிகரித்திருக்கிறது. புதிய மின் இணைப்பு, மின்சாதனப் பொருட் களின் பயன்பாடு அதிகரிப்பின் காரணமாக சாமானிய மக்களின் மின்பயன்பாடு அதிகரித் திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், ஏறத்தாழ, இரண்டரை மடங்குக்கு மேல் மின் தேவை அதிகரித்திருப்பதற்கான காரணம் இவைமட்டுமே அல்ல! பன்னாட்டு தொழில் நிறுவனங்களுக்கும், ஐ.டி. நிறுவனங்களுக்கும் தடையற்ற மின்சாரத்தை வழங்குவதாக ஏற் படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங் களும்; கேளிக்கை விடுதிகள், ஷாப்பிங் மால்கள், விளம்பர போர்டுகள் என மேட்டுக்குடி கும்பலின் ஆடம்பரத் தேவை களுக்கான மின்சாரப் பயன்பாடும் அதிகரித் திருப்பதன் காரணமாகத்தான் இவ்வளவு பற்றாக் குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழக அரசு கடுமையான மின்பற்றாக் குறையைச் சந்தித்து வரும் நிலையில், ''பன்னாட்டு நிறுவனங்கள், ஷாப்பிங் மால்கள் மற்றும் கேளிக்கை விடுதிகள் தமக்கு தேவை யான மின்சாரத்தை தாமே சொந்த முறையில் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்'' என்றோ; ''உனக்குத் தேவையான மின்சாரத்தை நீயே தனியாரிடம் நேரடியாக வாங்கிக்கொள்'' என்றோ அரசு கூறுவதில்லை. ''எனக்கு இலா பத்தை உத்திரவாதப்படுத்த வேண்டும்; சலுகை விலையில் தடையற்ற மின்சாரம் வேண்டும்'' என்று ஆணையிடுகின்றன பன்னாட்டு நிறு வனங்கள். அந்தக் கடமையைத் தனது சொந்தப் பொறுப்பில் எடுத்து அரசு நிறைவேற்றுகிறது. தனியார் மின்உற்பத்தியாளர்களிடமிருந்து ரூ.14.00 வரையில் ஒரு யூனிட் மின்சாரத்தை வாங்கி, அதனைச் சலுகை விலையில் இவர் களுக்கு வழங்குகிறது, அரசு.

ஒருபுறம், ஐ.டி. நிறுவனங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தடையற்ற மின்சாரத்தை வழங்கி அவர்களின் இலாபத்தை உறுதிப்படுத்தும் அதேசமயம், இதனைக் காரணம் காட்டி தனியாரிடம் கொள்ளை விலைக்கு மின்சாரத்தை வாங்குவதன் மூலம் தனியார் மின் உற்பத்தியாளர்களின் இலா பத்தையும் உத்திரவாதப்படுத்துகிறது, அரசு. இந்த இரட்டைச் சுமையையும், இதனால் ஏற் படும் நட்டத்தையும் மின்கட்டண உயர்வுகள் என்ற பெயரில் மக்களிடமிருந்து வழிப்பறி செய்கிறது, அரசு.

● இளங்கதிர்

## சொத்துக் குவிப்பு வழக்கு:

# நீதிமன்றங்களின் கள்ள ஆட்டம்

**சொத்துக் குவிப்பு வழக்கு மேல்முறையீட்டு மனு விசாரணையில் பவானி சிங் அரசு வக்கீலாக ஆஜராகிவருவது சட்டவிரோதமானது எனத் தெரிந்தும் உச்ச, உயர்நீதி மன்றங்கள் இந்த அநீதி தொடர்வதை அனுமதித்து வருகின்றன.**

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டிக்கப் பட்டுள்ள ஜெயா-சசி கும்பல், தமது சொந்த வழக்குரைஞர்களை நம்புவதைவிட, அரசு வழக்குரைஞர் பவானி சிங்கை நம்பித்தான் மேல்முறையீட்டு வழக்கை நடத்தி வருவதாகத் தெரிகிறது. கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் நடந்துவரும் மேல்முறையீட்டு விசாரணையில் நீதிபதி குமாரசாமி கேட்கும் கேள்விகளுக்கு அரசு வக்கீல் பவானி சிங் வாயைத் திறக்க மறுப்பதைக் காணும் எவரும் எளிதாக இம்முடிவுக்கு வரமுடியும். ஆனாலும், கர்நாடகா உயர்நீதி மன்ற 'நீதியரசர்களின்' அறிவுக்கு இந்த எளிய உண்மை புலப்படவில்லை. ''ஜெயா, சசி உள்ளிட்ட நால்வரும் பெங்களூரு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனு விசாரணையில் பவானி சிங் அரசு வக்கீலாகத் தொடருவதை ரத்து செய்து, அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கும்படி கர்நாடகா அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' எனக் கோரி தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ள கர்நாடகா உயர்நீதி மன்றம், சட்டத்தின் பொந்துகளுக்குள் புகுந்துகொண்டு பவானி சிங் அரசு வக்கீலாகத் தொடருவதற்கு மட்டுமல்ல, எதிரிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்ளும் அவரின் கபடத்தனங்களுக்கும் நல்லாசி வழங்கிவிட்டது.

கிரிமினல் வழக்குகள் ஒரு மாநிலத்தில் இருந்து வேறொரு மாநிலத்திற்கு மாற்றப்படும்பொழுது, எந்த மாநிலத்திற்கு மாற்றம் செய்யப்படுகிறதோ அந்த மாநில அரசுதான் அரசு வக்கீலை நியமனம் செய்ய வேண்டும் என வரையறுக்கிறது, குற்றவியல் நடைமுறைச் சட்டம். ஆனால், சொத்துக் குவிப்பு வழக்கை நடத்திவரும் தமிழக அரசின் இலஞ்ச ஒழிப்புத் துறை இச்சட்டத்திற்கு விரோதமாக, ஜெயா-சசி கும்பல் தமக்குப் பிணை வழங்கக் கோரி கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்த பொழுது, அவ்வழக்கில் ஆஜராவதற்கு பவானி சிங்கிற்கு அனுமதி அளித்தது. இந்தச் சட்டவிரோத அனுமதி உத்தரவைக் காட்டியே, சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்புக்கு எதிராக ஜெயா-சசி கும்பல் தொடுத்துள்ள மேல்முறையீட்டு வழக்கில் ஆஜராகிவருவதையும் நியாயப்படுத்தி வருகிறார், பவானி சிங்.

இப்படிச் சட்டவிரோதமான முறையில் பவானி சிங் மேல்முறையீட்டு வழக்கில் ஆஜராவதை எதிர்த்துதான் அன்பழகன் ஐந்து முறை அடுத்தடுத்து கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்தார். அன்பழகனின் ஐந்து மனுக்களும் கர்நாடகா உயர்நீதி மன்றத்தின் வெவ்வேறு அமர்வுகளால் விசாரிக்கப்பட்டாலும், கர்நாடக உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி வகேலா அமர்வு தவிர, பிற அமர்வுகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டு, தமது மனம் போன போக்கில் உத்தரவுகளைப் பிறப்பித்து அன்பழகனின் மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளன.

அன்பழகனின் மனு, நீதிபதி அப்துல் நசீர் அமர்வின் முன் விசாரணைக்கு வந்தபோது கர்நாடகா அரசின் தலைமை வக்கீல் ரவிவர்ம குமார், ''பவானி சிங் குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார் என்று பலமான புகார்கள் வந்துள்ளன. அரசு தரப்பில் யார் ஆஜராக வேண்டும் என்பதில் முடிவெடுக்கப்படவில்லை'' எனத் தெரிவித்து, மேல்முறையீட்டு வழக்கில் பவானி சிங் ஆஜராகி வருவது சட்டவிரோதமானது என்பதை உறுதிப்படுத்தினார். எனினும், அப்துல் நசீர் அமர்வு பவானி சிங் ஆஜராவதைத் தடைசெய்ய மறுத்துவிட்டது.

குற்றவாளிகளான ஜெயா - சசி கும்பலின் கைக்கூலியாக நடந்து கொள்ளும் ''அரசு வக்கீல்'' பவானி சிங்.



இவ்விவகாரம் தொடர்பாக நீதிபதி ஆனந்தபைராய

ரெட்டி என்ற மற்றொரு அமர்வு பவானி சிங்கிற்கு ஆதரவாக அளித்த உத்தரவை எதிர்த்து அன்பழகன் தாக்கல் செய்த மனுவை நீதிபதிகள் டி.எச்.வகேலா மற்றும் அசோக் பி.இஞ்சகேரி ஆகியோரைக் கொண்ட அமர்வு விசாரித்த பொழுது, ''குற்றவியல் நடைமுறைச்சட்டம் 24(1)-ன்படி தமிழக அரசின் அனுமதியுடன் பவானி சிங் ஆஜராகி வருவது சட்டப்படி தவறானது. உச்சநீதி மன்றம் பவானி சிங்கை நியமனம் செய்து பிறப்பித்த உத்தரவு, கீழ் நீதிமன்றத்துக்கு மட்டும்தான். கர்நாடகா அரசு இந்த வழக்கில் வழக்குரைஞரை நியமிக்காதபோது, பவானி சிங் ஆஜராகி இருப்பது சட்டத்திற்குப் புறம்பானது'' என்ற கருத்துக்களை தலைமை நீதிபதி டி.எச்.வகேலா முன்வைத்தார்.


சொத்துக்குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து வரும் கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதி குமாரசாமி.

''மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை 19 நாட்களாக நடைபெற்று வருகிறது. உச்சநீதி மன்றம் மூன்று மாதங்களுக்குள் வழக்கை முடிக்கச் சொல்லியிருக்கிறது. இந்த நிலையில் அரசு வக்கீல் பிரச்சினையை எழுப்புவது சரியல்ல'' என பவானி சிங்கின் வழக்குரைஞர் வாதிட்டபொழுது, ''அதற்காகச் சட்ட விதிகளை மீறிச் செயல்பட முடியுமா?'' எனக் கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி வகேலா அமர்வு, ''பவானி சிங்கை நீக்குவதால் எழக்கூடிய சாதக, பாதக அம்சங்களை அறிக்கையாக அளிக்குமாறு'' அன்பழகன், பவானி சிங், கர்நாடக அரசு ஆகிய முத்தரப்பிடமும் கோரியது. இந்த விசாரணையின்பொழுதே பவானி சிங்கிற்குப் பதிலாக அரசு மூத்த சிறப்பு வழக்குரைஞர் நாராயண ரெட்டியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்தை கர்நாடக அரசு முன்வைத்தது.

இந்த நிலையில்தான் ஆட்சேபணை மனுவொன்றைத் திடீரென தாக்கல் செய்தார், பவானி சிங்கின் வழக்குரைஞர். அதில், ''தலைமை நீதிபதி வகேலாதான், 23.9.2013 அன்று அளித்த உத்தரவில் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்துவந்த விசாரணையிலிருந்து அரசு வக்கீல் பவானி சிங்கை நீக்கினார். எனவே, அவர் விசாரித்தால் உரிய நியாயம் கிடைக்காது'' எனக் குறிப்பிட்டிருந்ததால், வகேலா அமர்வு அன்பழகனின் மேல்முறையீட்டு மனுவை விசாரிப்பதிலிருந்து விலகிக் கொண்டது.

மேல்முறையீட்டு வழக்கில் அரசு வக்கீலாக பவானி சிங் ஆஜராகிவருவதைக் கேள்விக்குள்ளாக்கிய கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகேலா.



வகேலா அமர்வு விசாரணையைத் தொடங்கியபொழுதே அவர் மீது ஆட்சேபணை தெரிவிக்காத பவானி சிங் தரப்பு, வகேலா அமர்வு தீர்ப்பு வழங்கத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் ஆட்சேபணையை எழுப்பியிருப்பதே சந்தேகத்திற்குரியதுதான். சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கிலிருந்து பவானி சிங் நீக்கப்படுவதால், அவருக்குத் தனிப்பட்ட நட்டம் எதுவும் ஏற்படப் போவதில்லை. ஆனால், ஜெயா தரப்புக்கு பவானி சிங்கை இழப்பது என்பது தலையில் இடி இறங்குவதற்குச் சமமானது. ஏனென்றால், சிறப்பு நீதிமன்றத்தில் தனக்கு எதிராக பவானி சிங்தான் வாதிட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் வரை சென்று வாதாடி, நீதிமன்ற வரலாற்றில் ஒரு 'புரட்சியை' ஏற்படுத்தியவர் ஜெயா!

ஜெயாவின் இந்த நம்பிக்கைக்கு உரியவராகத்தான் அன்று முதல் இன்றுவரை நடந்துவருகிறார் பவானி சிங். சொத்துக்குவிப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த போது இறுதிகட்ட வாதத்தைத் தொடங்காமல் வழக்கை இழுத்தடிக்க நானாவிதமான முட்டுக்கட்டைகளையும் போட்டவர்தான் பவானி சிங். இதனால் நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளான அவர் மீது அபராதமும் விதித்தார், சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா. அவ்வழக்கில் பவானி சிங் அரசு வக்கீலாக நியமிக்கப்பட்டதே முறைகேடானது, சட்டத்திற்குப் புறம்பானது என்பது அன்பழகன் தரப்பால் நிரூபிக்கப்பட்டு, கர்நாடகா உயர்நீதி மன்றத்தால் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதனை எதிர்த்து உச்சநீதி மன்றம் சென்ற ஜெயா-சசி கும்பலுக்கு ஆதரவாக, பவானி சிங் பதவி நீக்கப்பட்டதை ரத்து செய்து உத்தரவிட்டது நீதிபதிகள் சவுகான்-பாப்டே அமர்வு. இதே நீதிபதிகள்தான் சிதம்பரம் நடராசர் கோவில் நிர்வாகத்தைத் தமிழக அரசு தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டதை ரத்து செய்தும், சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான வழக்கிலும் பார்ப்பனக் கும்பலுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தவர்கள் என்பதைச் சொத்துக்குவிப்பு வழக்கோடு இணைத்துப் பார்த்தால்தான் பவானி சிங்கிற்கு ஆதரவாகப் பெறப்பட்ட தீர்ப்பு சட்டப்படியானது அல்ல, அது

இன்னொரு பார்ப்பன மனுநீதி என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயா-சசி கும்பல் கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்த வழக்கில், குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குவதை எதிர்ப்பதாக முதலில் கூறிய பவானி சிங், பின்னர் தீர்ப்பு வழங்கும் நேரத்தில் பிணை வழங்கலாம் என பல்டி அடித்தார். இதற்காக, அப்பிணை மனுவை விசாரித்த நீதிபதி சந்திரசேகராவால் பவானி சிங் நீதி மன்றத்திலேயே கண்டிக்கப்பட்டார். ''தனக்குச் சம்பளம் போதவில்லை என்ற காரணத்தை முன்வைத்து பவானி சிங் பதவி விலகல் கடிதம் அளித்துவிட்டதாகவும், எனினும், அவரைக் குற்றவாளிகள் தரப்பு வழக் குரைஞர்கள் சந்தித்து சமாதானப்படுத்தியதாகவும்'' சில நாட்களுக்கு முன் இந்து நாளிதழ் செய்தியொன்றை வெளியிட்டது. அரசு வக்கீலும் குற்றவாளிகள் தரப்பும் எந்தளவிற்கு கூடிக்குலாவி வருகிறார்கள் என்பதை இந்தச் செய்தி அம்பலப்படுத்திக் காட்டியது.

வழக்கு தொடர்பாக நீதிபதி குமாரசாமி கேட்கும் கேள்விகளுக்குப் பதிலை அளிக்க முன்வராமல் வழக்கையே சீர்குலைக்கும் சதித்தனங்களில் இறங்கியிருக்கிறார், பவானி சிங். அக்கேள்விகளுக்கு அன்பழகன் தரப்பு வழக்குரைஞர்கள்தான் உரிய பதிலை அளித்து வருகின்றனர். வழக்கின் நடைமுறை இவ்வாறிருக்க, கர்நாடகா உயர்நீதி மன்றமோ, ''மேல் முறையீட்டு வழக்கில் தன்னை மூன்றாவது நபராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; அரசு வக்கீலுக்கு உதவியாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரி அன்பழகன் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்து, ''மூன்றாவது தரப்பின் உதவி சிறப்பு நீதிமன்றத்தோடு முடிந்துவிட்டது'' என்ற கேலிக்கூத்தான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

பவானி சிங் அரசு வக்கீலாக நியமிக்கப்பட்டதை ரத்து செய்து சட்டப்படியான தீர்ப்பை அளித்தவர் என்பதைத் தாண்டி நீதிபதி வகேலா மீது சந்தேகம் கொள்வதற்கு எந்த அடிப்படையும் கிடையாது. ஆனால், பவானி சிங் மேல்முறையீட்டு வழக்கில் அரசு வக்கீலாக ஆஜராகிவருவது சட்டத்திற்குப் புறம்பானது என்பது மட்டுமல்ல, அவர் அரசிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து வருகிறார் என்பதற்காக சிறப்பு நீதிமன்றத்தாலும் உயர்நீதி மன்றத்தாலும் கண்டிக்கப்பட்டிருக்கிறார்; அவரின் இக் களவாணித்தனத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படியான தீர்ப்பை எழுதிய வகேலா விசாரணையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்படுகிறார். ஆனால், தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளுடன் கூடிக்குலாவி வரும் பவானி சிங் அரசு வக்கீலாகத் தொடருவதை, குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலுள்ள 24(8) என்ற பிரிவை வலிந்து மேற்கோள்காட்டி அனுமதித்திருக்கிறது நீதிபதிகள் என்.குமார் மற்றும் ஏ.வீரண்ணா அமர்வு. பவானி சிங்கின் ஒவ்வொரு நடவடிக்கையும் மேல்முறையீட்டு வழக்கைச் சீர்குலைக்கும் விதத்தில் இருந்துவரும் நிலையில், ''மேல் முறையீட்டு வழக்கு விசாரணையில் இருப்பதால் அதனைப் பாதிக்கும் எந்தவிதமான முடிவையும் எடுக்க முடியாது'' என நகைக்கத்தக்க உத்தரவை பிறப்பித்துள்ளனர் அந்நீதிபதிகள்.



அரசு வக்கீலாக முறைகேடாக நியமிக்கப் பட்ட பவானி சிங்கின் நியமனத்தை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) பி.எஸ்.சௌஹான். (கோப்புப் படம்)

சொத்துக்குவிப்பு வழக்கை 90 நாட்களுக் குள் முடிக்க வேண்டும் என வாய்வழி உத்தரவின் மூலம் கட்டப் பஞ்சாயத்து செய்துவைத்த உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து.



கடந்த டிசம்பரில் ஜெயாவின் பிணை காலத்தை நீட்டித்துத் தீர்ப்பு வழங்கிய உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி தத்து, இந்த வழக்கை 90 நாட்களுக்குள் முடித்துக் கொடுக்கும்படி தன்னிச்சையான முறையில் ஒரு கட்டப் பஞ்சாயத்து ஏற்பாடைச் செய்து அறிவித்தார். ஆனால், இந்த 90 நாள் கெடு உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பில் உத்தரவாக வெளியிடப்படவில்லை என்பதால், அதன் சட்டபூர்வ தகுதியே கேள்விக்குரியது. ஆனால், பவானி சிங் அரசு வக்கீலாக ஆஜராகிவருவதைத் தடை செய்ய மறுத்துவிட்ட கர்நாடக உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகள் இந்த வழக்கை 90 நாட்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டுமென்ற உச்சநீதி மன்றத்தின் கட்டப்பஞ்சாயத்தை, மீறமுடியாத மதக்கட்டளை போலச் சித்தரிக்கின்றனர்.

சிறப்பு நீதிமன்றத்தில் பவானி சிங் நியமிக்கப் பட்டதே வல்லுறவுக்கு இணையான ஒரு முறைகேடு.

பிறகு வல்லுறவு செய்த குற்றவாளிக்கே பெண்ணை திருமணம் செய்து வைப்பதைப் போல, விசாரணை நீதிமன்றத்தில் அவர்தான் அரசு வழக்குரைஞர் என்பதால் உயர் நீதி மன்றத்திலும் அவரே நீடிக்கிறார். இந்த அநியாயத்தை கேள்வி கேட்டால், ''90 நாட்களில் பிள்ளையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்'' (உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும்) என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருப்பதால், பவானி சிங்தான் புருசன் என்பதை இந்தக் கட்டத்தில் கேள்விக்குள்ளாக்க முடியாது என்று கூறி விட்டது கர்நாடக உயர்நீதி மன்ற அமர்வு. பின்னர் எப்போது கேட்பது? உச்சநீதி மன்ற உத்தரவுப்படி முதலில் பிள்ளையைப் பெற வேண்டுமாம். திருமணம் செல்லுமா, செல்லாதா என்பதை அப்புறம் முடிவு செய்வார்களாம். இந்த உவமானம் நகைச்சுவையோ, மிகையோ அல்ல; நடந்துகொண்டிருப்பதுதான்.

கர்நாடக உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்திருக்கிறார், அன்பழகன். ''இந்த மனுவையும், ஜெயலலிதாவிற்கு எதிரான வழக்கையும் படித்துப் பார்த்த பிறகே எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலும்'' எனக் கூறி விசாரணையை மார்ச் 9-ஆம் தேதிக்குத் தள்ளிவைத்திருக்கிறது நீதிபதிகள் ஆர்.கே.அகர்வால் - பி.சி.கோஸ் அமர்வு. ஆனால், பெங்களூரு உயர்நீதி மன்ற விசாரணைக்கு இவர்கள் இடைக்காலத் தடை ஏதும் விதிக்கவில்லை. பவானி சிங் பெங்களூரு உயர்நீதி மன்றத்தில் அரசு வக்கீலாக ஆஜராகிக் கொண்டிருப்பார், உச்சநீதி மன்ற நீதிபதிகள் தமது சௌகரியப்படி விசாரணையை நடத்துவார்கள் என்பதைவிட கேலிக்கூத்தான நீதி பரிபாலன முறை வேறு இருக்க முடியுமா? ஊழலுக்கு எதிராக ஊதார்விட்டு வரும் உச்ச, உயர்நீதி மன்ற நீதிபதிகள் பிரம்மஸ்ரீ கிரிமினல்கள் விடயத்தில் சட்டப்படி அல்லாமல், மனுதர்மப்படிதான் நடந்துகொள்வார்கள் என்பதற்கு இது இன்னுமொரு உதாரணமாகும்.

• செல்வம்

### தனியார்மயம், கார்ப்பரேட்மயம்

# மருத்துவத் துறையைச் சீரழித்து வரும் நோய்கள்!

**ம**க்களுக்குச் சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒவ்வொரு அரசுத் துறையும் இன்று மீளமுடியாத மாபெரும் வீழ்ச்சியிலும், சீரழிவிலும் சிக்கிக் கிடப்பதோடு, அவை மக்களுக்கு எதிரானவையாக மாறி நிற்கின்றன. இந்த இழிநிலைக்கு மருத்துவத் துறையும் விதிவிலக்கல்ல. ஒட்டுமொத்த மருத்துவத்துறையும் இன்று மருத்துவக் கட்டணம், மருந்து விலை என்ற போர்வையில் மக்களைக் கொள்ளையடிக்கும் அட்டைப் பூச்சிகளாக மாறி நிற்பதைப் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாகச் சொன்னால், இதய இரத்தநாள அடைப்பைச் சரி செய்யும் அறுவை சிகிச்சையில் மட்டும் வருடத்திற்கு 1,500 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய மக்களிடமிருந்து மருந்து கம்பெனிகள், தனியார் மருத்துவமனைகள், மருத்துவர்கள் கூட்டணி கொள்ளையடித்து வரும் புள்ளி விவரமொன்றை வெளியிட்டிருக்கிறது, இந்து நாளிதழ். அரசு மருத்துவமனைகளில்கூட இன்று காப்பீட்டு திட்ட அட்டையோடு உள்ளே செல்லவில்லை என்றால், அறுவை சிகிச்சை செய்து கொள்ளமுடியாது என்றவாறு அரசு மருத்துவமனைகளும் இலாப நோக்கத்தோடு இயங்கத் தொடங்கிவிட்டன. மருத்துவத் துறையின் இந்த வீழ்ச்சியை அங்குலம் அங்குலமாகத் தோலுரித்துக் காட்டும் இக்கட்டுரை, இதற்கு மாற்றாக மாவோவின் மக்கள் சீனத்தில் பின்பற்றப்பட்ட வெறுங்கால் மருத்துவத் திட்டத்தை வாசகர்களின் பரிசீலனைக்கு முன்வைக்கிறது.

''**ம**னிதாபிமான அடிப்படையில் சேவை செய்வதுதான் என்னுடைய பிரதான நோக்கமாக இருக்கும். அதன் மூலம் கிடைக்கும் பணமோ, இதர சலுகைகளோ எனக்கு இரண்டாம்பட்சம்தான் - இவ்வாறான பல மனித அறம், மாண்பு சார்ந்த உறுதிமொழிகளை ஏற்றுக் கையெழுத்திட்ட பின்னரே மருத்துவப் படிப்பை முடிக்கும் ஒவ்வொருவரும் இந்திய மருத்துவக் கழகத்தால் மருத்துவர்களாக அங்கீகரிக்கப்படுகிறோம். ஆனால், நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள், எத்தனை மருத்துவர்கள் இந்த உறுதிமொழிகளைக் கடைப்பிடிக்கிறோம்?'' - என மருத்துவத் துறை ஊழல்களை உள்ளிருந்தே அம்பலப்படுத்திய மருத்துவர் கே.ஆர்.சேதுராமன் தன்னுடைய ''போஸ்ட்மார்ட்டம்'' நூலின் முதல் அத்தியாயத்தில் கேள்வி எழுப்பியிருப்பார்.

இன்றைக்கு மருத்துவர்கள் எந்த அற உணர்வும் இல்லாமல், மனிதாபிமானம் இல்லாமல், சக மனிதன் என்ற அனுதாபம் இல்லாமல் பணத்தைக் கறப்பதிலேயே குறியாக இருக்கிற குற்றக் கும்பல்களாக மாறிவிட்டனர். அன்றாடம் செய்தித்தாள்களில் வெளியாகும் கீழ்க்கண்டவாறான செய்திகளே மருத்துவத் துறையின் இந்த வீழ்ச்சியை எடுத்துரைக்கின்றன.

- நோயாளி இறந்துபோன பிறகும் அதனை உறவினர்களிடமிருந்து மறைத்து பிணத்திற்குச் 'சிகிச்சை' செய்து பணம் கறப்பது.
- விவரமறியாத ஏழை நோயாளிகளிடமிருந்து சிறுநீரகம் மற்றும் பிற




நாடெங்கிலும் உள்ள அரசு இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரிகளை மூடப்போவதாக மைய அரசு அறிவித்திருப்பதைக் கண்டித்து சென்னையிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

உடல் உறுப்புகளைத் திருடிப் பணக்கார நோயாளிகளுக்கு விற்றுக் காசு பார்ப்பது.

● பிரசவம் ஆகும் நிலையில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்களை, பணம் இல்லாத காரணத்தால் சிகிச்சைக்கு அனுமதிக்காமல் வெளியே துரத்திவிடுவது.

● மருத்துவம் பார்க்கவரும் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவது, வன்புணர்ச்சியில் ஈடுபடுவது. இவற்றை ஆபாச வீடியோவாக எடுத்துவைத்துக் கொண்டு, அப்பெண்களை மிரட்டிப் பணம் பறிப்பது.

● மருந்து கம்பெனிகளுடன் இரகசிய ஒப்பந்தம் போட்டுக்கொண்டு நோயாளிகளைப் புதிய மருந்துகளைச் சோதனை செய்யும் சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்துவது.

● கருவில் இருப்பது ஆண் குழந்தையா, பெண்குழந்தையா என்பதைச் சட்டவிரோதமாகக் கூறிப் பணம் பெற்றுக்கொள்வதோடு, பெண் சிசுக்களைக் கருவிலேயே அழிப்பதற்கு உதவி செய்வது.

● இவற்றையெல்லாம் தாண்டி மருத்துவர்களைத் தரகர்களாக மாற்றும் திட்டத்தை அதிகாரபூர்வமாகநடத்திவருகிறது அம்பானியின் மருத்துவமனை. தங்களிடம் வரும் நோயாளிகளை அம்பானி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் மருத்துவர்களுக்கு இலட்சங்களில் இலஞ்சம் — 40 நோயாளிகளை அனுப்பிவைத்தால் ரூ.1 இலட்சம், 50 நோயாளிகளை அனுப்பி வைத்தால் ரூ.1.5இலட்சம் என்றவாறு — கொடுக்கப்படுகிறது.

### கைமாறும் மருத்துவ சேவை

எப்போது நோயாளிகளை தேவையற்ற பரிசோதனைகளுக்கு அனுப்பி வைக்கும் தரகு முறை அறிமுகமானதோ, அப்பொழுதிலிருந்தே அதன் பின்விளைவாக இன்றைய தலைமுறை மருத்துவர்கள் பலருக்கு நோயாளிகளிடம் பேசி, அவர்கள் உடலைப் பரிசோதித்து, நோயைக் கண்டறியும் ‘‘கிளினிக்கல் எக்ஸாம்’’ முறையே பரிச்சயம் இல்லாமல் போய்விட்டது. இன்று, மருத்துவரை விடவும் பரிசோதனைக் கருவிகளும், தனியார் மருத்துவ பரிசோதனை நிலையங்களும் சக்தி படைத்தவை ஆகிவிட்டன. மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையிலான பிணைப்பு அறுந்துவிடும் நிலையில், பெரும் முதலீடுகளுடன் மருத்துவமனைகளைத் தொடங்குபவர்கள் மருத்துவர்களை வெறும் பரிந்துரையாளர்களாகவும் தரகர்களாகவும் ஆக்கிவிடுகிறார்கள். வியாபாரிகளின் கையை நோக்கி மருத்துவம் சென்று கொண்டிருக்கிறது.

### அழுகி நாறும் மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வியின் தரம் 1990-களில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதிக்கப் பட்டதிலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கியது. பணக்காரக் குடும்பங்களிலிருந்து தகுதியே இல்லாத மருத்துவர்கள் உருவாவதற்கான கச்சிதமான வழிமுறைதான் இத் தனியார்மயம்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற ஆங்கில நாளிதழ் இரகசியமாகச் சேகரித்து வெளியிட்ட செய்தியின்படி, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இடங்கள் 50 இலட்சம் முதல் 1 கோடி ரூபாய் வரை விற்கப்படுவதாகவும், முதுகலைப் படிப்பிற்கான இடங்களின் விலை ரூ.1.5 கோடி முதல் 3 கோடி வரை உள்ளதாகவும் தெரிகிறது. இந்த விற்பனைகாரணமாக நாடு முழுவதும் எம்.பி.பி.எஸ். மற்றும் மருத்துவ மேல்படிப்பு மாணவர் சேர்க்கையில் ஒவ்வொரு ஆண்டும் 10,000 கோடி ரூபாய்க்கும் மேல் கருப்புப் பணம் புழங்குவதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

**இன்று, மருத்துவரை விடவும் பரிசோதனைக் கருவிகளும், தனியார் மருத்துவ பரிசோதனை நிலையங்களும் சக்தி படைத்தவை ஆகிவிட்டன. மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையிலான பிணைப்பு அறுந்துவிடும் நிலையில், பெரும் முதலீடுகளுடன் மருத்துவமனைகளைத் தொடங்குகிறவர்கள் மருத்துவர்களை வெறும் பரிந்துரையாளர்களாகவும் தரகர்களாகவும் ஆக்கிவிடுகிறார்கள்.**



மருத்துவர்கள், தமது தொழில் நெறிகளுக்கு எதிராகப் பணம் பறிக்கும் பேய்களாகவும், தரகர்களாகவும் மாறிவிட்டிருப்பதை அம்பலப்படுத்தி ''போஸ்ட் மார்டம்'' என்ற நூலை எழுதிய மருத்துவர் கே.ஆர். சேதுராமன்.

மாணவர் சேர்க்கையில் மட்டுமின்றி, படிப்பை முடித்துப் பட்டம் பெறுவது, இந்திய மருத்துவக் கவுன்சிலில் உறுப்பினராகப் பதிவு செய்வது என்று ஒவ்வொரு நிலையிலும் இலஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன. ஒரு மாணவருக்குப் பதிலாக வேறொரு மாணவர் தேர்வெழுதுவது, தேர்வுக்கு முன்னரே இரகசியமாக வினாத்தாட்கள் வெளியிடப்படுவது ஆகியவை சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன. இப்படி இலஞ்சத்திற்கு மேல் இலஞ்சம் கொடுத்து மருத்துவ பட்டத்தைப் பெறுபவர்கள், நோயாளிகளைப் பன்னாட்டு மருந்து கம்பெனிகளிடம் பணயம் வைத்து, தாம் விட்ட பணத்தை வசூலிக்கிறார்கள்.

**மருத்துவ சேவையின் தரத்தை நிர்ணயிப்பது எது ?**

ஒருவர் மருத்துவ படிப்பைப் படிப்பதற்கு மனித உடல் தேவை. அந்த உடலை டாடா, பிர்லா, அம்பானி பரம்பரையோ அல்லது அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ள புதுப் பணக்காரக் கும்பலோ, அவ்வளவு ஏன், தனியார் மருத்துவக் கல்லூரிகளை நடத்தும் முதலாளிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ தருவதில்லை, தரப் போவதுமில்லை. நூற்றுக்கு 99.9 சதவீத மருத்துவர்களே கூட உயிரோடு இருக்கும்போதும் சரி, செத்த பிறகும் சரி தமது உடல்களை மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்த சம்மதிப்பதில்லை. அரசு மருத்துவக் கல்லூரிகளோடும், தனியார் மருத்துவக் கல்லூரிகளோடும் இணைந்திருக்கும் மருத்துவமனைகளை நாடிவரும் ஏழை - ஏளிய மக்களின் உடல்கள்தான் மருத்துவ மாணவர்கள், மருத்துவர்களின் பரிசோதனைக் களமாக இருந்து வருகிறது. இப்படி எளிய மக்களின் உடல்களை அறுத்துப் பார்த்தும், பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தியும் மருத்துவம் படித்துவிட்டு வருகிற மருத்துவர்கள், அதன்பின் தங்களின் 'சேவைகளை' யார் அதிகம் பணம் தருகிறார்களோ அவர்களுக்குத்தான் செய்கிறார்கள்.

தருமபுரி, சேலம் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களின் அலட்சியத்தால் பச்சிளங் குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்ததைக் கண்டித்து விவசாயிகள் விடுதலை முன்னணியினர் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)






கோடிகோடியாய் இலஞ்சம் வாங்கிக் கொண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான அனுமதிகளை வாரி வழங்கிய இந்திய மருத்துவ கவுன்சிலின் முன்னாள் தலைவர் கேதான் தேசாய்.

அரசு மருத்துவமனையில் நோயாளிகளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் மருந்து எழுதிக் கொடுக்கும் மருத்துவர்கள், மாலை நேரத்தில் தனியார் மருத்துவமனையிலோ அல்லது தனது கிளினிக்கிலோ, நோயாளிகளிடம் கருணையும் அன்பும் வழியவழிய பேசுவார். அனைத்துவிதமான பரிசோதனைகளையும் பொறுமையாகச் செய்வார். இவ்வாறு மருத்துவ சேவையின் தரம் நோயாளிகளின் பொருளாதாரத் தரத்தை வைத்துதான் முடிவு செய்யப்படுகிறது.

**இலாப நோக்கில் இயங்கும் இந்திய அரசு**

சர்வதேச மருத்துவ இதழான ''லான்செட்'', இந்திய அரசு ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் நிதியை மருத்துவம்-பொது சுகாதாரத்திற்கு ஒதுக்கீடு செய்தால் மட்டுமே, அடுத்த 20 ஆண்டுகளில் தொற்று நோய்களால் ஏற்படும் இழப்பு, தாய்-சேய் இறப்பு விகிதம் ஆகியவற்றை உலகத்தரத்திற்கு ஈடாகக் குறைக்க முடியும் எனத் தெரிவிக்கிறது. ஆனால், ஆட்சியைப் பிடித்துள்ள மோடி கும்பலோ, பொது சுகாதாரத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட அற்பமான தொகையிலிருந்து மேலும் 6,000 கோடி ரூபாயை வெட்டப் போவதாக கடந்த டிசம்பர் மாதம் அறிவித்திருக்கிறது. பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைக்க இதைத் தவிர - அதாவது ஏழை மக்களின் உயிரோடு விளையாடுவதைத் தவிர - வேறுவழியில்லை என இரக்கமற்று அறிவித்திருக்கிறது, மோடி அரசு.

- இந்தியாவில் பிறந்து ஒரு மாதத்திற்குள் இறந்துபோகும் பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை



**எளிய மக்களின் உடல்களை அறுத்துப் பார்த்தும், பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தியும் மருத்துவம் படித்துவிட்டு வருகிற மருத்துவர்கள், அதன்பின் தங்களின் 'சேவைகளை' யார் அதிகம் பணம் தருகிறார்களோ அவர்களுக்குத்தான் செய்கிறார்கள்.**

ஆண்டுக்கு பத்து இலட்சமாக உள்ளது. இந்த இறப்பு விகிதம் மிகவும் வறிய ஆப்பிரிக்க நாடுகளைவிட அதிகமாகும்.

• உலகிலுள்ள மொத்த காசநோயாளிகளில் 20 சதம் பேர் இந்தியாவில் உள்ளனர். ஒவ்வொரு மூன்று நிமிடத்திற்கும் இருவர் காசநோயால் இறக்கின்றனர்.

• மாசுபட்ட குடிநீர் மற்றும் காற்றால் ஆண்டுக்கு ஒன்பது இலட்சம் பேர் மரணமடைகின்றனர்.

• 6 மாதத்திலிருந்து 5 வயது வரையிலான குழந்தைகளுள் 70 சதம் குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

• 500:1 என்ற விகிதத்தில் இருக்க வேண்டிய மக்கள் -மருத்துவர் விகிதம், 500:0.3 ஆக உள்ளது. இந்த விகிதமும் 29 சதவீத கிராமப்புற மக்களுக்குக் கிடைப்பதில்லை.

இவ்வாறு ஏற்கெனவே அதலபாதாளத்தில் உள்ள இந்தியாவின் பொது சுகாதாரத்தின் நிலைமை, பொது சுகாதாரத்திற்கான நிதி வெட்டப்படுவதால் இன்னும் படுமோசமான நிலைமைக்குத் தள்ளப்படுவது உறுதி. பொது சுகாதாரத்துக்கான நிதி வெட்டப்படுவது மருத்துவ சேவை தனியார்மயமாக்கப்படுவதன் ஒரு பகுதிதான். அதன் இன்னொருபுறம் பொது மருத்துவமனைகளே காப்பீடு திட்டங்கள், சேவைக் கட்டணங்கள், கட்டண சிகிச்சை (pay wards) போன்ற வழிமுறைகளின் மூலம் தனியார்மயமாக்கப்படுகின்றன. மேலும், மருத்துவ நல ஆராய்ச்சி முதலியவற்றைத் தனியார்மயப்படுத்துவது, மருத்துவம் தொடர்பான அரசின் பொறுப்புகளை அரசு சாரா நிறுவனங்களிடமும், தனியாரிடமும், பொது-தனியார் கூட்டு என்ற முறையில் ஒப்படைப்பது என்றெல்லாம் புதுப்புது வழிகளில் மருத்துவ சேவையில் தனியார்மயம் புகுத்தப்படுகிறது. பிரசவம் மற்றும் குழந்தை நலம், நோய்க் கட்டுப்பாடு செயல்பாடுகள் ஆகியவற்றில் உலக வங்கியின் கட்டளைக்கு ஏற்ப ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த அறக்கட்டளைகள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்பது உறுதி செய்யப்படுகிறது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டீஸ்கர், ஜார்கண்ட், உத்தராஞ்சல் முதலான மாநிலங்கள் பெரிய அளவில் இந்தப் பொது-தனியார் ஒத்துழைப்பையே நம்பியுள்ளன.

எளிய தொழில்நுட்பங்களைக் கொண்டு மருத்துவத்தைச் சமூகமயப்படுத்துதல் என 1978-இல் வகுக்கப்பட்ட ''அல்மா ஆடா'' (Alma Ata Declaration) கொள்கைக்குப் பதிலாக, உயர் தொழில்நுட்பங்களை மையமாகக் கொண்ட கார்ப்பரேட் மருத்துவ சேவை என்கிற கருத்தாக்கம் இன்று வலியுறுத்தப்படுகிறது. இதற்கேற்ப, அடிமாட்டு விலைக்கு நகர்ப்புற நிலங்களை வழங்குவது, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பரிசோதனைக் கருவிகளுக்கு வரி விலக்கு அளிப்பது என்றவாறு தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகளுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டு, இதற்கு ஈடாக அம்மருத்துவமனைகள் குறிப்பிட்ட சதவீத அளவில் ஏழைகளுக்கு இலவச மருத்துவம் அளிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறது. ஆனால், இந்த நிபந்தனையை எந்தவொரு தனியார் மருத்துவமனையும் கடைப்பிடிப்பதில்லை.

(தொடரும்)

ஊட்டச் சத்தான உணவின்றி,
நோஞ்சானாக உருக்குலைந்து போன குழந்தை.



Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...




புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் களமிறங்கினர். வீடுதோறும் தாய்மார்களையும், இளைஞர்களையும் சந்தித்தனர். பறையிசை முழங்க, வீதி நாடகங்கள் மற்றும் புரட்சிகரப் பாடல்களின் வாயிலாக எளிய முறையில், மக்களுக்குப் புரிந்த மொழியில் புரட்சிகர அரசியல் பிரச்சாரத்தை வீச்சாகக் கொண்டு சென்றனர்.

மக்களை உணர்வுரீதியாக அணிதிரட்டி, டாஸ்மாக் கடை முற்றுகைப் போராட்டத்திற்கு நாளும் குறித்தனர். பிப்ரவரி 15-ஆம் நாளன்று ஏழு கிராம மக்களும் திரண்டனர். பேருந்து வசதி முறையாக இல்லாத போதும், 5 கி.மீ. தூரம் வரையில் நடந்தே வந்திருந்தனர் சில கிராம மக்கள். பள்ளி மாணவர்களும், பெண்களும் நூற்றுக்கணக்கில் திரண்டிருப்பதை கண்டு வெட்கித் தலைகுனிந்த, குடிப்பதற்காக வந்திருந்த ஆண்களும் போராடும் பெண்கள் - குழந்தைகளுக்கு அரணாக நின்றனர். பறைமுழங்க, கண்டன முழக்கங்கள் வெடிக்க அவ்விடமே போர்க்கோலமானது.

''எப்பவும் போல கத்திட்டு போயிடுவானுங்க'' என்று ஏளனமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர், பிரம்மதேசம் போலீசார். திரளான மக்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் பேசிய, பு.மா.இ.மு.வின் மாநகர செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் ராஜாவும் சாரதியும் ''பேசுவதற்கு ஒன்றுமில்லை, பத்து நிமிட அவகாசம் தருகிறோம். கடையை இழுத்து மூடுங்கள். முடியாதென்றால் விலகிக் கொள்ளுங்கள்'' என்று போலீசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

பத்து நிமிட அவகாசமும் முடிந்தது. போலீசும் மாவட்ட நிர்வாகமும் கடையை மூடுவதாக இல்லை. களமிறங்கினார்கள் மக்கள். சாராய பாட்டில்கள் வீதியில் விழுந்து நொறுங்கியது. சாராயக்கடை அடித்து நொறுக்கப்பட்டது. கடையின் கதவை மக்களே இழுத்துப் பூட்டி வெற்றி முழக்கமிட்டனர். சிதறிய கண்ணாடித்துண்டு காலில்பட்டு இரத்தம் கசிந்த நிலையிலும், கடையை நோக்கி கல்லெறிந்த சிறுவர்களின் போர்க்கோலத்தைக் கண்டு போலீசே விலகி நிற்கத்தான் வேண்டியிருந்தது.

எல்லாம் முடிந்த பிறகு, போராட்டத்தை முன்னின்று நடத்திய பு.மா.இ.மு. தோழர்களை வலுக்கட்டாயமாகப் வேனில் ஏற்றியது போலீசு. போலீசு வாகனத்தை வழிமறித்த மக்கள், ''நாங்களும்தான் கடையை அடித்து நொறுக்கினோம். முடிந்தால், குழந்தை குட்டிகளோடு எங்களையும் கைது செய்!'' என்று உறுதியோடு போலீசை எதிர்த்து நின்றனர். வேறுவழியின்றி, தோழர்களை விடுவித்து பின்வாங்கியது போலீசு.

போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிவிட்ட நிலையில், சதித்தனமான முறையில் போலீசுப் படையைக் குவித்து, தோழர்களுக்கு அரணாக சுற்றி நின்ற கிராம மக்களையும் பெண்களையும் தடியடி நடத்தி போலீசார் விரட்டியடித்தனர். பு.மா.இ.மு.வைச் சேர்ந்த 4 பெண் தோழர்கள் உள்ளிட்ட 9 பேரைக் கைது செய்ததோடு, இதனை எதிர்த்து நின்ற அக்கிராமத்தைச் சேர்ந்த சந்திராவையும் கைது செய்தனர். கைதான பு.மா.இ.மு. தோழர்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள்; 23 வயதிற்குட்பட்டவர்கள்.

''பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தது, அரசு ஊழியரைப் பணி செய்யவிடாமல் தடுத்தது, கொடும் காயம் விளைவித்தது, அவதூறு...'' என 11-க்கும் மேற்பட்ட சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து வேலூர் சிறையிலடைத்தனர். வேலூர் சிறைவாசலை எட்டும் பொழுது, நள்ளிரவை கடந்து 1 மணி ஆகியிருந்த போதிலும், உற்சாகம் குறையாமல் முழக்கமிட்டு சிறை வளாகத்தை அதிர வைத்தனர், தோழர்கள்.

போராடிய மக்களைத் தடியடி நடத்திக் கலைத்துவிட்டு, முன்னணியாக நின்றவர்களை வேலூரில் சிறைவைத்துவிட்டு, போலீசு பாதுகாப்புடன் சாராயக் கடை மீண்டும் திறக்கப்பட்டது, இரண்டே மணி நேரத்தில்.

பள்ளிகள் - கல்லூரிகள், குடியிருப்புப் பகுதிகளில் டாஸ்மாக் கடையை வைக்கக்கூடாது என்ற விதி இருந்தும், அதனை அப்பட்டமாக மீறுகிறது தமிழக அரசு. தான் சொல்லும் சட்டத்தைத் தானே காலில் போட்டு மிதிப்பதோடு மட்டுமின்றி, ''சட்டப்படி நட, சாராயக்கடையை மூடு'' என்று நியாயமான முறையில் போராடும் மக்களின் மண்டையைப் பிளக்கிறது; பொய்வழக்கில் சிறை வைக்கிறது. போலீசு துணையோடு மீண்டும் கடையைத் திறக்கிறது.

''டாஸ்மாக் சாராயக்கடை பொதுச்சொத்து - அதற்கு சேதம் விளைவித்து விட்டார்கள்; அரசு ஊழியர்களைப் பணி செய்ய விடாமல் தடுத்தார்கள்'' என்றெல்லாம் வெட்கங்கெட்ட முறையில் நீதிமன்றத்தில் பிணை வழங்க மறுப்பு தெரிவித்து வாதாடுகிறது அரசு.

இவ்வளவுக்குப் பிறகும், ''டாஸ்மாக் சாராயக்கடையை மூடு!'' என்று மனு எழுதிக் கொண்டு வரிசையில் காத்துக் கிடக்க நாம் என்ன முட்டாள்களா? அரசுக்கும் போலீசுக்கும் புரியும் மொழியில் இனி நாமும் பேசுவோம்! இலக்கு நோக்கித் தாக்குதலைத் தொடுப்போம், அழிவிடைத்தாங்கிச் சிறுவர்களைப் போல!

● கலைமதி

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.



ஊருக்கும் வெட்கமில்லை..
இந்த உலகுக்கும் வெட்கமில்லை..
யாருக்கும் வெட்கமில்லை...
இதிலே அவளுக்கு வெட்கமென்ன...?











